
399

# செல்வன்
# செந்தமிழ் வாசகம்




399
30 MAY 1958
MADRAS

TB
031(7)
N58
89521

ல்வன் கம்பெனி.
ாகர்கோவில்

399
2-58

# செல்வன் செந்தமிழ் வாசகம்

## இரண்டாம் படிவம்—பொதுப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAY 1958
MADRAS

ஆசிரியர் :
G. மைக்கேல் பிள்ளை, M.A.
பதிப்பாசிரியர் :
மகாவித்துவான்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

[Paper used : 24 lbs. White Printing.]

ஜெகசெல்வன் கம்பெனி

ராமவர்மபுரம் | தெப்பக்குளம்
நாகர்கோவில் | திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை]

[விலை { அணா 14
நயா பைசா 87

முதற்பதிப்பு—நவம்பர், 1953
திருத்தப் பதிப்பு—செப்டெம்பர், 1954
மறுபதிப்பு (2)—1956
மறுபதிப்பு (3)—1957
மறுபதிப்பு (4)—1958

TB
031(7)
N58

30 MAY 1958
MADRAS

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 4-5-1955, Page 42]

கன்னிமாரா ஆவணக்காப்பக நிலையம்
89521
சென்னை-600 008.

Kabeer Printing Works, Madras (3767)

# முன்னுரை

இத்தமிழ்ப் பாட நூல்கள், முதல் 3 படிவங்களிற் பயிலும் மாணவ மாணவியரின் தமிழறிவு வளர்ச்சியுற்று, அண்மையில் அரசியலார் வெளியிட்டுள்ள பாடத்-திட்டத்துக்கியைய மொழித்திறன் பெற்று விளங்க வேண்டுமெனும் விழுமிய நோக்கங்கொண்டு வெளியிடப் பெறுவனவாகும். இப்பாட நூல்களில் அவ்வப்படிவத்துக்-காகக் குறிப்பிடப்பட்டுள்ள **செய்யுள் உரை நடைகள்** அளவுக்கேற்பத் தரப்பட்டுள்ளன. பண்டைய புலவர் அரசர் முதலியவரைப் பற்றிய செய்திகளும், தமிழ் நாட்டு வரலாற்றையொட்டிய நிகழ்ச்சிகளும், பிற நாட்டு அறிஞர் வரலாறுகளும், நம் நாட்டுக் கலைச் செல்வங்களை விளக்கும் கட்டுரைகளும், விஞ்ஞானக் கலையறிவாற்-கண்ட புதுமைகளும், பிற நாடு சென்று புதியன கண்ட அறிஞர் பெருமக்களின் அரிய செயல்களும், மாணவரின் பேச்சுத் திறனை வளர்த்தற்கான உரையாடல்களும் ஏற்ற பெற்றி இயற்றப்பட்டுள்ளன. கற்றற்கெளிமை நோக்கி ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சொற்-பொருள் விளக்கமும், கட்டுரைப் பயிற்சியும், அறிவு விளக்க வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவரின் தகுதிக்கேற்பச் சொல்லாக்கமும், நடை-யுயர்வும் அமைத்து அறிவு வளர்க்கும் சாதனமாக வெளியிடப் பெறும் இப்பாட நூல்களைத் தமிழுலகம் ஆதரிக்குமெனும் உறுதியுடையேன்.

இப்பாட நூல்களை அன்புடன் கருத்தூன்றிப் பார்வையிட்டு, அரிய திருத்தம் பல செய்து, அச்சேற்றப் பெருந்துணையாயிருந்த உயர்திருவாளர் **மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கு** என் நன்றி உரித்தாகுக!

ஆசிரியன்.

# பொருளடக்கம்


| பாடம் | | | பக்கம் |
|---|---|---|---|
| | **உரைநடைப் பகுதி** | | |
| 1. | நெல்லை மாநகரம் | ... | 1 |
| 2. | ஓவியக் கலை | ... | 8 |
| 3. | ஆராயாது செய்த நட்பு | ... | 15 |
| 4. | ஜேம்ஸ் குக்கு | ... | 22 |
| 5. | பண்டைத் தமிழர் வாணிகச் சிறப்பு | ... | 29 |
| 6. | வானவூர்தி | ... | 33 |
| 7. | தலையாலங்கானத்துப் போர் | ... | 40 |
| 8. | இன்பச்செலவு | ... | 45 |
| 9. | செருக்கினால் சிறப்பிழந்த மன்னன் | ... | 52 |
| 10. | காகிதம் செய்தல் | ... | 59 |
| 11. | எல்லோராக் குகைக் கோவில்கள் | ... | 64 |
| 12. | கா. நமச்சிவாய முதலியார் | ... | 68 |
| 13. | நூல் நிலையங்கள் | ... | 72 |
| 14. | பாமரர் நீதி | ... | 79 |

பாடம் பக்கம்

## செய்யுட்பகுதி

I. வாழ்த்துப் பகுதி :

1. திருவாசகம் ... 88
2. திருவருட்பா ... 88
3. இரட்சணிய யாத்திரிகம் ... 88
4. சீருப்புராணம் ... 89

II. நீதிப் பகுதி :

1. நன்னெறி ... 92
2. நீதி நெறி விளக்கம் ... 92
3. திருக்குறள் ... 95

III. கதைப் பகுதி :

சிங்கத்தை முயல் கொன்ற கதை ... 107

IV. பல்சுவைப் பகுதி :

1. பழக்கமும் பிறவிக்குணமும் ... 111
2. மீனுக்கும் பேனுக்கும் சிலேடை ... 111
3. தேங்காய்க்கும் நாய்க்கும் சிலேடை... 111
4. குற்றாலக் குறவஞ்சி ... 111

## நாட்டு வணக்கம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ! ஜயஹே ! ஜயஹே !
ஜய ஜய ஜய ஜயஹே !

## தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.
நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது ;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது ;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன ; நின் புகழைப்
பாடுகின்றன ;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி ! வெற்றி ! வெற்றி !

# இரண்டாம் படிவம்

## பொதுப் பகுதி

### 1. நெல்லை மாநகரம்

1. தமிழ் வளர்ந்த நாடு பாண்டி நாடு. இப்பாண்டி நாட்டையே 'பழம்பதி' எனச் சிறப்பித்தனர் புலவர். இந்நாட்டின் தொன்மை கருதியே இதனைப் பழம்பதி என வழங்கினர். இப்பழந்தமிழ் நாட்டின் தென்பகுதி **தென்பாண்டி நாடு** எனப்படும். இத்தென்பாண்டி நாடு தொன்று தொட்டுத் தெய்வ மணமும் தமிழ்மணமும் கலந்து கமழும் நாடாகும். தாம் வழிபட்ட இறைவனையே '**தென்பாண்டி நாட்டான்**' எனச் சமயாசாரியர் ஒருவர் வழங்கினர். 'மீளா அருள் புரிவான் நாடு, என்றும் தென்பாண்டி நாடே தெளி,' என்பது அவர்தம் கூற்றுகும். இத்தகைய தென்பாண்டி நாட்டின் தலைநகராய் **நெல்லை மாநகரம்** எனச் சிறப்பிக்கப்படும் **திருநெல்வேலி** திகழ்கின்றது.

2. இந்நெல்லை நகர், பொன் திணிந்த புனல் பெருகும் **பொருனையெனும்** திருநதியின் கரையில் அமைந்துள்ளது; இயற்கை எழில் மிக்க நெல் வயல்கள் சூழப்பெற்றது; வயல்களையடுத்து மணம்மிக்க மலர்ச்சோலைகளை உடையது; மக்கள்

மகிழ்ந்து விளையாடுவதற்குரிய இடமாகவும், பாத-சாரிகள் வெயிலவன் பயமின்றித் தங்கிச் செல்லும் இடங்களாகவும் அமைந்துள்ள சோலைகளையுடை-யது; 'கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்தர மதுத்திவலை சிந்துபூந்துறை' எனச் சிறப்பிக்கப்-பெற்ற **சிந்துபூந்துறை** என்னும் நீர்த்துறை அமையப் பெற்றது. கலை வளர்க்கும் நிலையமாய், காண்பவர் மனத்தைக் கவரும் கல்விக் களஞ்சிய-மாய் **இந்து கல்லூரி** இச்சிந்து பூந்துறையின்கண் காட்சியளிக்கின்றது.

3. சிந்துபூந்துறையின் எதிரேயுள்ள **வீர-ராகவபுரம்** தமிழ் மக்களின் வண்மையை விளக்-கும் சின்னமாயுள்ளது. படை வீரமும் கொடை வீரமும் ஒருங்கே வாய்ந்த **தளவாய் முதலியார்** வழி வந்த வள்ளல் **வீரராகவ முதலியார்**. இவர் பெயராற்றான் இப்பகுதி இப்பெயர் பெற்றது. இதன் கிழக்கே **சுலோசன முதலியார்** அமைத்த பொருனையின் குறுக்கேயமைந்த பெரும்பாலம் நெல்லையையும் **பாளையங்கோட்டை**யையும் சேர்க்கின்றது. இப்பாலத்தையடுத்துச் செல்லும் பாட்டையின் கீழ்மருங்கு ஆட்சியாளர் அலுவ-லகங்கள் அமைந்துள்ளன.

4. நெல்லை மாநகரின் நடுவில் **நெல்லையப்பர்** கோவில் அமைந்துள்ளது. இதன் நாற்புறமும் அகன்ற வீதிகள் உள்ளன. இவற்றைத் '**தேர் வீதிகள்**' என வழங்குவர். இவ்வீதிகள் திரு-விழாக்காலங்களில் தேரோடும் தெருக்களாகவும், பிற நாட்களில் கடை வீதிகளாகவும் திகழ்கின்றன. இவற்றில் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் பலவும் விற்கும் வணிக நிலையங்கள்

வரிசையாய் அமைந்துள்ளன. பண்டைக் காலத்துத் தமிழரின் வாணிகச் சிறப்புக்குச் சான்றாய் விளங்குவன இக்கடைவீதிகள் எனலாம். உழவர்கள் விளைவிக்கும் உணவுப் பொருள்கள், உள்நாட்டு வினைஞர்களின் கை வன்மையால் ஆக்கப்பட்ட கவினுறு பொருள்கள், ஆடைகள், அணிகள், விளக்குகள், இனிய பண்டங்கள், பானங்கள், பல்வகை மலர் மாலைகள் ஆதியன அழகு பெறக் குவிக்கப்பட்டும், அடுக்கப்பெற்றும், கண் கவரும் முறையிற் காணப்படும்.

5. இந்நகரின் தெருக்கள் முன்னைய வரலாற்று நூல்களாய் விளங்குகின்றன. **காவற்புரைத் தெரு** என்பது கீழ்ப்பால் அமைந்த குறுகிய தெருவாகும். அரசிறை செலுத்தத் தவறும் மக்கள், பாண்டிய நாயக்க மன்னர்கள் காலத்தில், காவற்புரையில் அடைக்கப்பட்டார்கள். **வடமலையப்ப பிள்ளையன்** என்பவர், முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தென்பாண்டி நாட்டு ஆட்சியாளராய் இருந்தனர். வரி செலுத்தத் தவறிய தென்திருப்பேரைத் தமிழர் இருவரை இவராணையால் காவற்புரையில் சேவகர் சேர்த்தனர். அவர்கள் தங்கள் துன்பந் தெரிவித்து இயற்றிய பாடல்களைக் கேட்ட பிள்ளையன், அவர்களை விடுவித்து, அவர்கள் புலமையை வியந்து பாராட்டினர் என்பது இத்தெருவைப் பற்றிய வரலாறு.

6. **மேலை ரத வீதி**யையடுத்துக் **கூழைக் கடைத்தெரு** உள்ளது. நவதானியங்களைக் குறிக்கும் '**கூலம்**' என்ற சொல்லே '**கூழை**' என மருவியதாகவும் கூறுவர். கூலம் விற்கும் கடை, கூலக் கடை. கூலக் கடை, கூழைக் கடை என

மருவிற்று. கற்றோர்க்கே பொருள் விளங்கும் 'கூலம்' என்ற சொல்லைப் பாதுகாத்து வரும் சிறப்பு இத்தெருவிற்கு உரியதாயிற்று.

7. தமிழன்பு கொண்ட **கால்டுவெல் ஐயர்** கண்ட கொற்கை வரலாறு, சில உண்மைகளை உணர்த்துகின்றது. மண்மேடிட்டுக் கிடக்கும் கொற்கைத் துறையை அடுத்துப் பாண்டிய மன்னனது **அக்கசாலை** அமைந்திருக்கிறது. 'பாண்டி நாடு முத்துடைத்து,' என்றதற்கேற்ப, பாண்டி நாட்டு முத்துச் செல்வம் கொற்கைத் துறையிற் கிடைத்தமையின், இத்துறை முற்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்தது. இதன் பெருமை நாளடைவில் குறையவே, இங்குள்ள அக்கசாலைத் தொழிலாளரும் திருநெல்வேலியை அடைந்தனர்; தம் முன்னைய தொழிலை நினைவிற்கொள்ளத் தாம் குடியேறிய இடத்திலுள்ள தெருவை **அக்கசாலைத் தெரு**வென வழங்கினர். பொருனை நதியின் மணல் கொற்கைத் துறைமுகத்தைத் தூர்த்துவிட்டதாயினும், அக்கசாலைத் தெரு அதன் பழம்பெருமையை மக்களுக்கு அறிவிக்கின்றது.

8. நெல்லையம்பதி இயற்கைவளன் அமைந்து, எழில் பெற விளங்குவது; கற்றூர் பலர் கல்வியில் மேம்பாடுற்றிருப்பது; பண்டு பலருக்கும் இலக்கிய இலக்கண அறிவூட்டிய புலவர் பலரைப் பெற்றிருந்தது. **துறைமங்கலம் சிவப்பிரகாசருக்கு** இலக்கணம் கற்பித்த **மாசிலாமணித் தேசிகர்** வாழ்ந்த இடம் இந்நகரமேயாகும். **அழகிய சொக்கநாதப் புலவர்** தம் சமற்கார மொழிகளால் மக்களுக்கு நகையூட்டி, நற்கவிகள் பாடினர். **மனோன்மணீய** ஆசிரியர் **சுந்தரம் பிள்ளை** தமிழ்ப்

புலமை பெற்றுத் தமிழ்க் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் பயிற்ற இந்து கலாசாலை நிறுவினர். இக்காலை **மதுரைத் தாயுமானவர்** பொருளுதவி பெற்று இந்து கல்லூரி நிழல் தரும் மரங்களிடையே தலை நிமிர்ந்து தனிப்பெருமையுடன் தொண்டாற்றுகின்றது. பெண்கள் கலாசாலையும் **மீனாட்சிபுரத்**தில் மிளிர்கின்றது. கனியும்மணமும் கண்ணுக்கும் கருத்துக்கும் களி விருந்தாகின்றன.

9. பழம்பதியான நெல்லைப்பதி புத்துருப் பெற்றுள்ளது. மின்சார விளக்குகள் பாட்டைகளில் ஒளி செய்கின்றன. அணி அணியாக நெய்யாவி வண்டிகள் மக்களை ஏற்றிச் செல்கின்றன. பண்டைய மாட்டு வண்டிகள், இன்றைய இருப்புப்பாதை நிலையத்தைச் சார்ந்த பெருவெளியில் பந்தி பந்தியாய் நிற்கின்றன. இருப்புப் பாதை நிலயம், சந்திப்பாய் விரிவடைந்து, **திருச்செந்திலுக்குச்** செல்லும் புகை வண்டித் தொடர் நிற்கும் பெருமை பெற்றுள்ளது. கீழ்ப்பாற்செல்லும் பொருனை, தன் தண்ணிய நீரால் மக்களின் உடலையும் உள்ளத்தையும் குளிரச்செய்து, இவ்வணி நகரை அழகு பெறச் செய்கிறது.

**சொற்பொருள் விளக்கம் :**

**தொன்மை - பழமை, தொன்றுதொட்டு - பழங்காலமுதல், கமழும் - மணம் வீசும், மீளா - நீங்காத, கூற்று - சொல், திணிந்த - நிறைந்த, பொருனை - தாமிரபரணி, எழில் - அழகு, வெயிலவன் - சூரியன், கந்தம் - மணம், பொழில் - சோலை, மதுத்திவலை - தேன் துளி, சின்னம் - அடையாளம், மருங்கு - பக்கம், கவினுறு - அழகமைந்த, தூக்கப் பெற்றும் - தொங்க விடப்பட்டும், காவற்புரை - சிறை வீடு, இறை - வரி, கூழை -**

குறுகியது, கொற்கை - பாண்டி நாட்டுத் துறை, அக்கசாலை - நாணயங்கள் அடிக்கும் இடம், சமற்கார மொழிகள் - சந்தர்ப்பத்திற்கேற்ப இரு பொருள்படக் கூறும் சொற்கள், மனோன் மணீயம் - மனோன்மணி என்பவளது வரலாற்றைக் கூறும் நாடக நூல், களி விருந்து - மிக்க இன்பம், நெய்யாவி வண்டிகள் - மோட்டார் வண்டிகள், பந்தி - வரிசை, திருச்செந்தில் - திருச்செந்தூர்.

### பயிற்சி :

1. அணி அணியாக, பந்தி பந்தியாக, தொன்று தொட்டு, தலை நிமிர்ந்து—இவற்றை வாக்கியங்களில் அமை.

2. எதிர்ச் சொற்கள் எழுது :—
   பெருமை, தொன்மை, அகன்ற, இயற்கை.

3. பிரித்தெழுது :—
   சமயாசாரியர், நாற்புறம், முந்நூறு, இருப்புப்பாதை.

### வினாக்கள் :

1. தென்பாண்டி நாட்டின் சிறப்பு யாது?
2. நெல்லை நகர் வளமிக்கது என்பதற்குக் காரணம் யாது?
3. நெல்லையிலமைந்த நீர்த்துறை யாது? அதன் பெருமை யாது?
4. ஆட்சியாளர் அலுவலகங்கள் யாங்குள்ளன?
5. நெல்லையம்பதியின் நடுவில் காணப் பெறுவது யாது?
6. பண்டைத் தமிழரின் வாணிகச் சிறப்பை எங்குக் காணலாம்?
7. 'நெல்லையின் தெருக்கள் வரலாற்று நூல்கள்'—இதனைச் சான்று காட்டி விளக்கு.
8. கொற்கையைப் பற்றி நீ அறிந்ததென்ன?
9. நெல்லை மாநகரின்கண்ணுள்ள கல்வி நிலையங்கள் சிலவற்றைக் குறிப்பிடு.
10. குறிப்பெழுது :—அழகிய சொக்கநாதர், பொருநை, இந்து கல்லூரி.

**கட்டுரையாக்கப் பயிற்சி :**

'நெல்லையின் சிறப்பு' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

**இலக்கணம் :**

1. வணிகர் பொருள்களை விற்கின்றனர்.
வணிக நிலையங்களில் பொருள்கள் இருக்கின்றன.

இவ்வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு-பொருளை எடுத்தெழுது.

2. இவ்வாக்கியத்தை 'வணிகரால் பொருள்கள் விற்கப்-படுகின்றன,' எனச் செயப்படுபொருளை எழுவாயாக மாற்றியும் எழுதலாம். இவ்வாறு எழுதும் போது, 'படு' என்ற துணை-வினை, வினைமுற்றுடன் சேர்க்கப்பட வேண்டும். எழுவாய் மூன்றும் வேற்றுமையுருபு ஏற்று வரும். இதனைச் **செயப்-பாட்டு வினை வாக்கியம்** என்பர்.

வினை முதலாகிய எழுவாய் செய்வதை விளக்குவது **செய்வினை வாக்கியம்** ஆகும்.

'வணிக நிலையங்களில் பொருள்கள் இருக்கின்றன.'—இவ் வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லை. ஆதலின், இதனைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுதல் இயலாது.



## 2. ஓவியக்கலை

1. மக்கள் தாங்கள் கண்ட அழகான பொருள்களையும் மனத்திற்கொண்ட கருத்துக்களையும் பிறருக்கு அறிவிப்பதில் இன்பம் கொள்ளுகின்றார்கள். இவற்றை அறிவிப்பதற்குப் பல வழிகள் உள்ளன. அண்மையில் உள்ளவர்களுக்கு வாய்மொழியாகப் பேசித் தெரிவித்தல், தூரத்திலுள்ளவர்களுக்கு எழுதித் தெரிவித்தல், இனிமையாக இசைப்பாட்டால் அறிவித்தல், சித்திரங்கள் வரைந்தும் உருவங்கள் செதுக்கியும் உணர்த்துதல் முதலான வழிகள் பயன்படுகின்றன. இவையே பேச்சு; எழுத்து, இசை, சித்திரம், சிற்பம் என்ற கலைகளாய் வளர்ந்தன. இக்கலைகளின் வளர்ச்சி

மக்களின் உணர்ச்சிப் பெருக்கையும் அவற்றைப் புலப்படுத்தும் திறமையையும் பொறுத்ததாகும். மக்கள் சிறப்புடன் செல்வம் பெற்று இன்ப வாழ்க்கை நடத்தும் போது இக்கலைகள் பெருகும். அவர்கள் வறுமையால் துன்புறும் போது இவை சிறிது சிறிதாக அழிந்து மறையும்.

2. தமிழ் நாடு முன் காலத்தில் செல்வமும் வளனும் பெற்றுப் பற்பல துறைகளிலும் சிறப்புப் பெற்றிருந்தது. பல கலைகளும் வளர்ச்சியுற்றிருந்தன. அவைகளுள் ஒன்ருன '**ஓவியம்**' என்னும் சித்திரக் கலையும் மேம்பாடுற்றிருந்தது. பண்டை நூலாகிய சிலப்பதிகாரம், **மாதவி** என்னும் பெண் ஓவிய நூல் கற்றிருந்தாள் என்பதைத் தெரிவிக்கிறது. இதனுல், ஆடவர்களேயன்றிப் பெண்டிரும் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனரென்பது தெளிவாகும். மனிதர் நிற்கும் நிலை, இருக்கும் நிலை, இயங்கும் நிலை முதலியவற்றைப் படங்களில் எவ்வாறு தீட்டுவதென்பது அந்நூலில் எழுதப் பெற்றிருந்தது. இந்த உலகத்திற்காணும் உயிர் வகைகளுள் ஒவ்வொன்றையும் உள்ளது உள்ளவாறு படத்தில் எழுதிக் காட்டும் வகையும் அந்நூலில் கூறப்பட்டிருந்தது.

3. பண்டைக் காலத்தில் பெரிய மாளிகைகளின் சுவர்களில் சித்திரங்கள் வரையப் பெற்றிருந்தன. முதலில் சுவரைச் சிறிதும் மேடு பள்ளமின்றிச் சமனுக்கி, சுண்ணும்பு பூசி, அதன்மீது அழகிய ஓவியங்களைக் கண்ணைக் கவரும் முறையில் வரைந்தனர். பிராணிகளின் உருவங்கள், மலர்கள், வரலாற்று நிகழ்ச்சிகள் முதலியன விளக்கமாகத் தீட்டப்பட்டன. திருவிதாங்கூரைச் சேர்ந்த

பதுமநாபபுர அரண்மனையின் சுவர்களில் அழகிய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அந்தப்புர மாதர் கண்டு களிப்பதற்காக அவை தீட்டப்பட்டனவெனக் கூறுவர். அழகிய மாதர்கள் ஊஞ்சலாடுதல், பாடுதல், ஆடுதல் இவற்றைச் சித்திரிக்கும் படங்கள், அக்கால மாதர் அணிந்த ஆடை வகையினையும் அணிகலன்களையும் விளக்குகின்றன. அரசர்களின் திருவுருவங்களைத் தீட்டியுள்ள படங்கள் அவர்களுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட சூழ்ச்சிகளையும் அவற்றினின்றும் அரசர்கள் தப்பிச் செல்வதற்காக அவர்களின் பணியாட்கள் தங்கள் உயிரைக் கொடுக்கத் துணிந்த தீரத்தையும் நம் மனக்கண் முன் கொண்டு வருகின்றன. பாத்திரங்கள், அணிகலன்கள், ஆடைகள், மரச்சாமான்கள், கட்டில்கள் முதலியவற்றிலும் சிறந்த உருவங்கள் காட்சியளிக்கின்றன.

4. **சித்தன்ன வாசல்** என்னும் ஊரிலுள்ள கோவில் ஓவியச் சிறப்பைக் காட்டுவதற்கு இடமாயமைந்துள்ளது. கோவில்களின் சுவர்களிலும் கூரைகளிலும் தூண்களிலும் அழகான ஓவியங்கள் காணப்படுகின்றன. அரசன், அரசியர் நடனமாதர், கடவுளர் இவர்களுடைய ஓவியங்கள் உள்ளன. இவற்றால், அக்கால மக்களின் ஓவியத் திறமையும், ஆடை அணி முதலிய ஒப்பனைகளும் நன்கு தெரிய வரும். **இராசராசன்** என்ற சோழ அரசன் தஞ்சையிற்கட்டிய கோவிலில் பல சித்திரங்களை எழுதுவித்தான். புராணக்கதை நிகழ்ச்சிகள் அங்கே காணப் பெறுகின்றன. சமயக்கொள்கைகள், வழிபாடுகள் முதலியவற்றை அச்சித்திரங்களால் நாம் அறிந்துகொள்ளலாம்.

5. மனிதன் தோன்றிய காலத்திலேயே ஓவியக்கலையும் தோன்றியது. மனிதன் தன் மனத்திலெழும் அழகுணர்ச்சியை வடிவத்தில் அமைக்க விரும்பினான்; மிருகங்கள், பறவைகள் முதலியவற்றின் வடிவத்தைச் செம்மண்ணாலும் கரியாலும் சுவர்களில் வரைந்தான். அதனைப் பார்க்குந்தோறும் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருத்தல் கூடும். இந்த மகிழ்ச்சியே காகிதம், துணி, பலகை முதலியவற்றின் மேலும் சித்திரங்களை வரைய அவனைத் தூண்டியது. சிலர் இயற்கைக் காட்சிகளை அப்படியே சித்திரித்துக் காட்டினர். காலஞ்செல்லச்செல்ல உருவங்களுக்கு வண்ணந்தீட்டும் வழக்கம் ஏற்பட்டது. பல வித வண்ணங்களைக் குழைத்துத் துகிலிகை கொண்டு தீட்டினர். திரைகளில் இத்தகைய வண்ணச் சித்திரங்கள் வரையப்பட்டன. கதைகளும் கவிகளும் ஓவியங்களாய் மாறின. நகைச் சுவை தோன்றப் படங்கள் எழுதப்பட்டன. ஆடைகளிலும், வீடுகளிலும் சித்திரங்கள் தோன்றின. பஞ்சு நூலாலும் பட்டு நூலாலும் சரிகையாலும் சித்திரங்கள் அமைக்கப்பட்டன.

6. பழந்தமிழ் நூல்களால் தமிழ் நாட்டில் ஓவியக் கலை உயர்வு பெற்றிருந்தது என்பதை அறியலாம். ஓவியப் புலவர் பலர் வாழ்ந்தனர். அரசர்களுட்சிலரும் ஓவியம் வரைவதில் கை தேர்ந்தவராயிருந்தனர். அரண்மனைதோறும் சித்திர மண்டபங்கள் எழுந்தன. கோவில்கள் எழுத்தோவிய நிலையங்கள் ஆயின. சங்க காலத்திற்குப்பின் ஏறக்குறைய ஐந்நூறுண்டுகள் நாடு அந்நியர் படையெடுப்பால் துன்பமுற்றது. பின்பு

ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பல்லவ மன்னர் இக்கலையை வளர்த்தனர். ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின் தஞ்சையில் சோழர் ஆட்சி புரிய ஆரம்பித்தனர். சிவப்பணி செய்வதற்காகக் கோயில்கள் கட்டிய அவர்கள் ஓவியக் கலையையும் சிறப்பித்தார்கள். அண்மையில் சேரநாட்டு ஓவியப் புலவர் **இரவிவர்மா** சித்திரக் கலையைப் புது முறையில் வளர்த்தனர். மேல் நாட்டு ஓவியங்களும் கீழ் நாட்டு ஓவியங்களும் ஆதரிக்கப்பட்டன. இந்திய நாட்டின் பற்பல பகுதிகளிலும் ஓவியக்கலை போற்றப்பட்டு வருகிறது.

7. 'சித்திரமும் கைப்பழக்கம்,' என்பது தமிழ் நாட்டு முதுமொழி. ஓவியக்கலை உயர்ந்தோங்க, நம் நாட்டுப் பழைய ஓவியங்களைப் படமெடுத்துப் பள்ளிகளிலும், பொருட்காட்சிச் சாலைகளிலும் வைத்து, யாவரும் கண்டு களிக்கச் செய்ய வேண்டும். அதனால், இளைஞரும் முதியவரும் சித்திரம் தீட்ட முன் வருவர். ஓவியக் கலையைப் பற்றிய நூல்கள் வெளியிடல் வேண்டும். ஓவியப் போட்டிகள் நடத்தி, ஊக்கமளித்தல் வேண்டும். இவ்வாறு செய்யின், நாட்டில் மீண்டும் ஓவியக்கலை வளர்ச்சியுறும்.

**சொற்பொருள் விளக்கம்:**

அண்மை - சமீபம், துன்புறுதல் - துன்பமடைதல், வளன் - செழிப்பு, இயங்குதல் - அசைதல், வண்ணம் - நிறம், கைதேர்ந்திருத்தல் - தேர்ச்சி பெற்றிருத்தல், பணி - தொண்டு, பொருட்காட்சிச்சாலை - பற்பல பொருள்களையும் சேகரித்து ஓரிடத்தில் காட்சிக்கு வைத்திருக்குமிடம், தீட்டுதல் - வரைதல், மீண்டும் - திரும்பவும், போற்றப்படுதல் - வளர்க்கப்படுதல்.

### பயிற்சி :

1. **இருபொருள் எழுது :**—கலை, களி, தீட்டு, நூல்.

2. **பிரித்தெழுது :**—மேனாடு, பற்பல, எழுத்தோவியம், நூற்றாண்டு, சிலப்பதிகாரம்.

3. **குறிப்பு எழுது :**—இரவி வர்மா, சித்தன்னவாசல்.

### வினாக்கள் :

1. மக்கள் தங்கள் கருத்தை எவ்வாறு தெரிவிப்பார்கள் ?

2. கலைகள் எவ்வாறு வளர்ந்தன ?

3. சிலப்பதிகார நூலில் ஓவியக் கலையைப் பற்றிக் கூறியுள்ளது யாது ?

4. பண்டை மாளிகைகளிற் காணப்படும் சித்திரங்கள் எவற்றை விளக்குகின்றன ?

5. சித்தன்னவாசல் ஓவியங்களால் அறியப்படுவன யாவை ?

6. மனிதன் முதலில் சித்திரத்தை எவ்வாறு வரைந்தான்?

7. சித்திரக்கலை வளர நாம் மேற்கொள்ள வேண்டுவன யாவை ?

### கட்டுரையாக்கப் பயிற்சி :

‘ஓவியக்கலை வளர்ந்த விதம்’ என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

### இலக்கணம் :

1. கீழ் வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாகவும், செயப்பாட்டுவினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாகவும் மாற்று :—

மக்கள் மகிழ்ச்சி கொள்ளுகின்றார்கள்.

நூல்களில் உண்மையை அறியலாம்.

பல்லவர் ஓவியக் கலையை வளர்த்தனர்.

சுவர்களில் சித்திரங்கள் வரையப்பெற்றிருந்தன.

ஓவியப் புலவர் வரலாற்று நிகழ்ச்சிகளைத் தீட்டினர்.

2. பல்லவர் இக்கலையை வளர்த்தனர்.—இது செய்தி வாக்கியம். பல்லவர் கலையை வளர்த்தனரா?—இது வினு வாக்கியம்.

சுவரைச் சமனுக்கு.


சித்திரக்கலை சிறப்புற்றிருந்தது.

பல்லவருக்கு முன் கலை வளரவில்லை.

சோழர் ஆட்சி தொடங்கியது.

மாதவி ஓவிய நூல் கற்றிருந்தாள்.

இவற்றை வினு வாக்கியமாக மாற்று.



## 3. ஆராயாது செய்த நட்பு

1. **மகத நாட்டில் சண்பக வனத்தில் சித்திராங்கன்** என்னும் ஒரு மானும் **சுபுத்தி** என்னும் ஒரு காகமும் நெருங்கிய நட்புடன் வாழ்ந்து வந்தன. மான் அங்குள்ள சண்பக மரத்தினடியில் தங்கும். காகம் மரத்தின் கிளையில் தங்கும். அவை இரண்டும் பகலில் இரை தேடி, இரவில் மரத்தை அடைந்து, ஒன்றேடொன்று அளவளாவி இன்பமாய் வாழ்ந்தன.

2. மான் நன்கு கொழுத்திருந்தது. அவ்வனத்தில் **குத்திரபுத்தி** என்ற நரியொன்று இருந்தது. அது மானைக் கண்டது. அதனைக்கொன்றால், தனக்குப் பல நாட்களுக்கு உணவுக்குக் குறைவு இராது என அது எண்ணியது ; ஆயினும் மானைக்

கொல்லுவதற்குரிய வன்மை தன்னிடமில்லை என அறிந்து, அதனை வஞ்சனையாற் கொல்லச் சூழ்ச்சி செய்தது. ஒரு நாள் மாலை வேளையில் மான் மரத்தை நோக்கிச் செல்லும் போது, அதன் எதிரிற்சென்று, 'நண்பனே, சுகமா?' எனக்கேட்டது. மான் திடுக்கிட்டு, 'நீ யார்? நான் உன்னை முன்பு பார்த்ததில்லையே!' என்றது.

3. நரி, 'நண்பா, பயப்படாதே! நான் இக்காட்டில் வாழும் குத்திரபுத்தி என்னும் நரி. எனக்குத் துணைவர் யாருமில்லை. உன்னைக் கண்டவுடன், நான் உன்னை நண்பனாகக் கொள்ள எண்ணினேன். நீ என்னை நண்பனாக ஏற்றுக்கொள்ள மாட்டாயா?' என்றது.

4. மான், 'சரி, மிகவும் மகிழ்ச்சி கொள்ளுகிறேன்! என் நண்பன் சுபுத்தியிடம் உன்னை அழைத்துச் செல்கிறேன்; வா,' என்றது.

5. பிறகு மான் நரியை அழைத்துக்கொண்டு சண்பக மரத்திற்கு வந்தது. மரத்தின்மேலிருந்த சுபுத்தி, மானைப் பார்த்து, 'நண்பா, உன்னுடன் வந்திருப்பவன் யார்?' என்று கேட்டது.

6. மான், 'இவன் குத்திரபுத்தி; என்னுடன் நட்புக்கொள்ள விரும்புகின்றான். ஆதலால், நான் இவனை இங்கு அழைத்து வந்திருக்கின்றேன்,' என்றது.

7. காகம், 'நண்பா, ஒருவனது குணத்தை நன்கு அறியாமல் அவனைச் சினேகித்தலாகாது; இவனது குணத்தை ஆராயாமல் இங்கு அழைத்து வந்துவிட்டாயே!' என்றது.

8. நரி, 'ஒருவனது குணத்தை அவனுடன் பழகிய பின்புதானே அறியமுடியும்? அதற்கு முன்

எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? மேலும், நல்லவர்களின் நட்புக் கண்டவுடன் ஏற்படுகின்றது,' என்று கூறியது.


9. மான், 'சுபுத்தி, இவன் என் நண்பனாகிவிட்டான். ஆதலால், நீ தடை சொல்லாதே. உன்னைப் போன்று இவனும் எனக்கு மித்திரனாய் இருக்கட்டும்,' என்றது.

10. இதைக் கேட்ட காகம் ஒன்றும் சொல்லவில்லை. மூன்றும் தங்கள் வழக்கப்படி இரை தேடி உண்டு, இரவில் சண்பக மரத்தை அடைந்தன. இவ்வாறு பல நாட்கள் கழிந்தன. ஒரு நாள் நரி மானைப் பார்த்து, 'நண்பா, இந்தக் காட்டில் பசுமையான பயிர் இருக்கிறது. உனக்கு விருப்பமானால், அதனை உனக்குக் காட்டுகின்றேன்,' என்றது. மான் அதனுடன் சென்றது. நரி மானை அழைத்துக்கொண்டு சென்று, பயிரிடப்பட்ட கொல்லையைக் காண்பித்தது. மான் பசுமையான பயிரைக் கண்டதும் மகிழ்ச்சி கொண்டது. மான் அன்று முதல் ஒவ்வொரு நாளும் அங்குச் சென்று மேய்ந்து வந்தது. இதனைக் கவனித்த கொல்லைக்காரன் வலையைக் கட்டினான். வழக்கப்படி அங்கு மேயச்சென்ற மான் வலையிற்சிக்கிக்கொண்டது.

11. மான் வலையிற்சிக்கியதைக் கண்ட நரி, 'இன்றுதான் என் விருப்பம் நிறைவேறியது! நான் இம்மானின் இறைச்சியைத் தின்பேன்!' எனத் தனக்குள் சொல்லிக்கொண்டது. மான், நரியை நோக்கி, 'மித்திரா, ஏன் சும்மா நிற்கிறாய்? விரைவில் இவ்வலையை அறுத்து என்னை விடுதலை செய். ஆபத்துக் காலத்தில் உதவி செய்வது நண்பனது கடமையன்றோ?' என்றது. நரி,

'நண்பா, நீ சொல்வது மெய்தான். ஆயினும், எனக்கு இன்று விரதத் தினமாகையால், நான் தோலினுல் ஆகிய வலையைக் கடிக்கக் கூடாதே! நாளைக்கு உனக்கு எந்த விதமான உதவியும் செய்வேன்,' என்று சொல்லிவிட்டு, அருகே இருந்த புதரில் ஒளிந்துகொண்டது.

12. இரவானதும் மான் வழக்கம் போல மரத்தடிக்கு வாராததை உணர்ந்த காகம், மறு நாள் காலையில் மானைத் தேடிக்கொண்டே அந்தக்



கொல்லையை அடைந்தது; வலையிற்சிக்கித் துன்புற்ற மானைக் கண்டு, 'நண்பா, நீ எவ்வாறு வலையிற்சிக்கினுய்?' எனக் கேட்டது. மான், 'நண்பா, இது உன் சொல்லைக் கேளாததனுல் நேரிட்ட துன்பம்,' என்றது. காகம், 'உன் நண்பனுகிய நரி எங்கே?' எனக் கேட்டது. மான், 'நான்

இறந்ததும் என் இறைச்சியைத் தின்ன இங்கே-தான் ஒளிந்துகொண்டிருப்பான்,' என்றது. காகம், 'உண்மையான நண்பன் பேச்சைக் கேளா-தவனுக்கு இப்படிப்பட்ட துன்பம் வரும். இதைப் பற்றிப் பேசிப் பயனின்று. இதோ! கொல்லைக்-காரன் வருகின்றான்! நீ செத்தவனைப் போன்று, மூச்சை அடக்கிக்கொண்டு படுத்திரு. நான் உன் கண்களைப் பொய்யாகக் குத்திக்கொண்டிருக்-கிறேன். நீ இறந்துவிட்டாய் என எண்ணிக் கொல்லைக்காரன் வலையை அவிழ்த்து வைப்பான். அப்பொழுது நான் கத்துவேன். உடனே, நீ எழுந்து வேகமாக ஓடித் தப்பிவிடு,' என்றது. மான், 'நண்பா, வந்தனம்! நீ கூறியபடியே செய்கிறேன்,' என்றது.

13. காகம் சொன்னபடியே, மான் இறந்தாற்-போலக் கிடந்தது. காகம் அதன் தலையில் உட்-கார்ந்து, அதன் கண்ணைக் குத்துவது போலப் பாசாங்கு செய்தது. இதைப் பார்த்த கொல்லைக்-காரன், மான் இறந்துவிட்டது என்றெண்ணி வலையை அவிழ்த்ததும் காகம் கத்தியது. மான் எழுந்து ஓட்டம் பிடித்தது. கொல்லைக்காரன் கையிலிருந்த தடியை மானை நோக்கி எறிந்தான். தடி குறி தவறி அங்கு ஒளிந்திருந்த நரியின்மேற்-பட, அது இறந்தது.

14. மானும் காகமும் சண்பகமரத்திற்குச் சென்றன. நண்பனுக்குக் கேடு நினைத்த நரி தானே இறக்க நேர்ந்தது. காகமும் மானும் முன் போலச் சந்தோஷமாய் வாழ்ந்தன.

**சொற்பொருள் விளக்கம் :**

அளவளாவி - கலந்து சம்பாஷித்து, சுபுத்தி - நல்ல புத்தி, சூழ்ச்சி - தந்திரம், கொல்லை - வயல், மித்திரன் - நண்பன், பாசாங்கு - பாவனை, கேடு - தீங்கு.

**பயிற்சி :**

1. ஏற்றுக்கொள், அளவளாவி, ஆராயாமல், 'வழக்கப்படி —இச்சொற்களை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.

2. வலை, வளை ; இறக்க, இரக்க ; கொல்லை, கொள்ளை— இச்சொற்களின் பொருள் வேறுபாட்டை விளக்கு.

3. அந்நரி, எவ்வாறு, ஒவ்வொரு, என்றெண்ணி— இவற்றைப் பிரித்தெழுது.

**வினாக்கள் :**

1. மானும் காகமும் எங்கே வாழ்ந்தன ?
2. மானின் இறைச்சியைத் தின்ன விரும்பியது எது ?
3. நரி செய்த சூழ்ச்சி யாது ?
4. நரியைக் கண்ட காகம் மானுக்குக் கூறியது யாது ?
5. மான் எவ்வாறு வலையிற் சிக்கியது ?
6. மானைக் கண்ட நரி அதனிடம் கூறியது என்ன ?
7. மான் தப்பிப் பிழைக்கும்படி எது என்ன உபாயம் கூறிற்று ?
8. நரியின் முடிவு என்ன ?
9. இக்கதையிலிருந்து நீ அறியும் படிப்பினை யாது ?

**கட்டுரையாக்கப் பயிற்சி :**

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்,' என்ற பழமொழியை விளக்கி ஒரு கதை எழுது.

**இலக்கணம் :**

1. 'இங்கு அழைத்து வந்துவிட்டாயே!'—இது என்ன வாக்கியம் ?

2. என்னிடம் வன்மை இருக்கிறது.—இது உடன்பாட்டு வாக்கியம். என்னிடம் வன்மை இல்லை.—இது எதிர்மறை வாக்கியம்.


கீழ்க்காணும் வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்று :—

நீ என்னை நண்பனாக ஏற்றுக்கொள்.

ஒருவனுடன் பழகிய பின்புதானே அவன் குணத்தை அறிய முடியும் ?

நான் வலையைக் கடிக்கக் கூடும்.

நீ கூறியபடியே செய்வேன்.



# 4. ஜேம்ஸ் குக்கு

1. புதிய பொருள்களைக் கண்டு களிக்க விழைவது மக்கள் யாவருக்கும் இயல்பாய் அமைந்த குணமாகும். சிறப்பாகச் சிறுவர்கள் புதிய செய்தியை அறியவும், புதிய கதைகளைக் கேட்கவும், புதிய பொருள்களைக் காணவும் விரும்புவார்கள். இக்குணமே உலகின் முன்னேற்றத்துக்குக் காரணமாகும். இளமையில் இக்குணம் அமைந்து, புதிய இடங்களுக்குச் சென்று, பிறர் காணாத இடங்களைக் கண்டு பிறர்க்கு அறிவித்துப் புகழ் பெற்றவரே **ஜேம்ஸ் குக்கு** என்னும் ஆங்கிலேயராவர்.

2. ஜேம்ஸ் குக்கு, இங்கிலாந்தில் கி. பி. 1728-ஆம் ஆண்டு **யார்க்ஷயர்** என்னும் ஊரில் ஏழைக் குடியானவரின் புதல்வராய்ப் பிறந்தார்; ஆதலின், கல்வி கற்கும் வசதியில்லாமல், இளமையிலேயே ஒரு கடையில் வேலை செய்து வந்தார்.


அவ்வேலையை அவர் விரும்பவில்லை. வெளி நாடு சென்று அங்குள்ள மக்களின் நடை உடை பாவனைகளை அறிய அவர் மனம் விரும்பியது. அவர் வெளி நாடு சென்று திரும்பும் மாலுமிகளைக் காணும் போதெல்லாம் தமக்கு அப்பேறு எப்போது கிடைக்கும் என ஏங்கி நிற்பர். இவ்வெண்ணம் நாளுக்கு நாள் வலுப்பெற்றுக் கப்பற்படையில் சேர அவரைத் தூண்டியது. கடையினின்றும் நீங்கிக் கப்பற்படையைச் சேர்ந்த அவர், தமது குன்ரு ஊக்கத்தாலும் திறமையாலும் படிப்படியாய் உயர்ந்தார். கடலின் ஆழத்தைக் கணக்கிடுவதில் அவர் மிக்க திறமை பெற்று விளங்கினர். அரசாங்கத்தார் அவரது ஆற்றலைக் கண்டு அவரைக் கப்பற்றலைவராக்கினர்.

3. ஜேம்ஸ் குக்குக்கு 1769-ஆம் ஆண்டு, ஆகஷ்டு திங்கள், 26-ஆம் நாள் **பிளிமத்து** என்னும் துறைமுகத்திலிருந்து சில விஞ்ஞானிகளுடன் பசிபிக்குக் கடலிலுள்ள தீவுகளுக்குச் செல்லுமாறு **இராயல் கழகத்**தாரிடமிருந்து வேண்டுகோள் வந்தது. பதினெட்டு மாத கால அளவிற்குப் போதுமான உணவுப் பொருள்கள் கப்பலில் ஏற்றப்பட்டன. ஜேம்ஸ் குக்கு இரண்டரை மாதம் பிரயாணஞ் செய்து, தென்னமெரிக்காவின் கிழக்குக் கரையிலுள்ள **ரியோ டி-ஜனீரோ** என்ற துறைமுகத்தை அடைந்தனர். அங்குள்ள **போர்த்துகீசியர்** ஆங்கிலேயரைச் சந்தேகிக்கும் இயல்பினராயிருந்தனர். ஆதலின், அத்துறைமுதத்தை நீங்கித் தென்கோடியிலுள்ள **டியோரா டெல் பியூகோ** என்னும் தீவையடைந்தனர். அங்கு அவருடன் சென்ற தாவர அறிஞர்

**டாக்டர் சோலந்தர்**, பதின்மருடன் சில செடிகளை ஆராயத் தொடங்கினர். குளிர் மிகுதியாகவே அவர் உறங்கத் தொடங்கினர். அவ்வுறக்கம் மேற்கொண்டவர் உயிர் துறப்பர் என்பதை அறிந்த உடன் சென்றவர்கள், நெருப்பு மூட்டி அவரை விழித்தெழச் செய்து, கப்பலுக்கு அழைத்துச் சென்றார்கள். இங்ஙனம் அவர் பேராபத்தினின்றும் தப்பினர்.

4. அவர்கள் அத்தீவினின்றும் புறப்பட்டுத் தென்னமெரிக்காவின் தென்முனையைச் சுற்றிக்கொண்டு, 1769-ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள், பத்தாம் நாள் **டஹிட்டித்** தீவை அடைந்தார்கள். அங்குள்ள மக்கள் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அங்கு அவர்கள் மூன்று மாதம் தங்கினார்கள். குக்குடன் சென்றவர்கள் அத்தீவைப் பற்றிய செய்திகளைக் குறித்துக்கொண்டார்கள். 'இத்தீவிலுள்ள மக்கள் உயரமானவர்கள் ; அழகானவர்கள் ; பழுப்பு நிறம் வாய்ந்தவர்கள் ; நாள்தோறும் மும்முறை குளிப்பவர்கள் ; உடல் முழுவதும் பச்சை குத்திக்கொள்பவர்கள் ; முரட்டுத் துணி நெய்யவும், கூடை முடையவும் அறிந்தவர்கள் ; நட்புணர்ச்சிக்கு அடையாளமாகப் பசுங்கிளைகளை ஏந்தி எங்களை வரவேற்றார்கள்,' என்பது அவர்கள் குறிப்பிற்கண்ட செய்தியாகும். குக்கு அம்மக்களுக்குத் தாம் கொண்டு போன எலுமிச்சை, நாரத்தை, கிச்சிலி முதலிய பழமரங்களின் விதைகளை அளித்துப் பயிரிடும் விதத்தையும் கூறினர் ; அந்தத் தீவிற்குச் **சொசைட்டித் தீவு** எனப் பெயரிட்டனர்.

5. டஹிட்டித் தீவிலிருந்து புறப்பட்ட தலை-




ஜேம்ஸ் குக் கடலில சென்ற வழி

வர் குக்கு, நியூஸீலந்து தீவின் வடகிழக்குக் கரையை 1769-ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள், 7-ஆம் நாள் அடைந்தனர். அத்தீவின் மக்கள் அவர்களை நன்கு வரவேற்கவில்லை. அத்தீவிலுள்ள மலையுச்சிக்கு அவர்கள் **குக்கு மலைச் சிகரம்** எனப் பெயரிட்டார்கள்; தென்தீவையும் வடதீவையும் பிரித்த நீர்ப்பகுதியைக் **குக்கு நீர்ச்சந்தி** என வழங்கினார்கள். வடக்குத் தீவில் நரமாமிசம் உண்ணும் மக்கள் இருந்தார்கள்; அதனால், அங்குள்ள நீர்ப்பகுதியைக் '**கானிபால்ஸ் பே**' என வழங்கினார்கள். அவ்விடத்தை விட்டுத் தலைவர் குக்கு ஆஸ்திரேலியாக் கண்டத்தின் கிழக்குக் கரையை அடைந்தனர்.

6. அவ்விடம் மிகவும் செழிப்புள்ளதாயிருந்தது. மரம் செடி கொடிகள் பசுமையுடன் விளங்கின. ஆகையால், அந்நீர்ப்பகுதியைப் '**பாட்டனி பே**' என வழங்கினர். அங்குக் காணப்பட்ட விநோதமான பிராணியைக் '**கங்காரு**' என்று வழங்கினர். அங்குள்ள மக்கள் உடல் உறுப்புக்களுக்கு வெள்ளை, சிவப்பு நிறங்களைத் தீட்டிக்கொள்வார்கள்; கிளிஞ்சில்களைக் கோத்து அணிந்துகொள்வார்கள். அவர்கள் மீன் பிடித்தும், வேட்டையாடியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் குக்குத் தலைவரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் அன்புடன் நடத்தினார்கள்.

7. அவ்விடமிருந்து புறப்பட்ட கப்பல், பவளப் பாறைகளும் மணல் திட்டுக்களும் நிறைந்த நீர்ப்பகுதியை அடைந்து, பெருஞ்சேதத்தினின்றும் தப்பி, **யார்க்கு முனையை** அடைந்தது. பின்னர்க் கிழக்கிந்தியத் தீவு-

களுக்குச் சென்று, **சாவகத்தீவிலுள்ள பட்டேவியாவில்** சிறிது காலம் தங்கினர். பிறகு மேற்கு நோக்கிச் சென்று, ஆப்பிரிக்காவின் **நன்னம்பிக்கை முனையை** அடைந்து, ஒரு மாத காலம் தங்கி, அங்கிருந்து புறப்பட்டு, 1771-ஆம் ஆண்டு, சூலைத் திங்கள், 12-ஆம் நாள் இங்கிலாந்தை அடைந்தனர்.

8. குக்கு இரண்டாம் முறையும் கடற்பிரயாணஞ்செய்து, தென்கடலில் பெரிய கண்டம் எதுவுமில்லையென்பதைக் கண்டறிந்தனர்; 1776-ஆம் ஆண்டு தம் மூன்றும் கடற்செலவை மேற்கொண்டு, **பஸிபிக்குப் பெருங்கடலில்** உள்ள **ஹாவாய்த் தீவுகளைக்** கண்டனர். அவரது முயற்சியின் பயனாகவே, ஆங்கிலேயர் நியூஸீலந்து முதலிய தென்கடல் நாடுகளில் குடியேறிக் கைத்தொழில், பயிர்த்தொழில் முதலியவற்றை வளர்க்க முடிந்தது. தரை நூல், தாவர நூல், உயிர் நூல் இவற்றிற்கும் அவர் கண்டனவும் கேட்டனவும் பெரிதும் பயன்பட்டன.

9. ஜேம்ஸ் குக்கு 1779-ஆம் ஆண்டில், **ஹாவாய்** என்னும் இடத்தில் அந்நகரத்தவரால் கொல்லப்பட்டார்.

**சொற்பொருள் விளக்கம் :**

நடைஉடை பாவனைகள் - பழக்க வழக்கங்கள், பதின்மர் - பத்துப் பேர், துறப்பர் - நீங்குவர், நரமாமிசம் - மனிதர் இறைச்சி, கானிபால் - மனிதர் இறைச்சியை உண்பவன், கங்காரு - ஒரு வினோதப் பிராணி; அது தன் வயிற்றுப் பையில் தன் குட்டியை வைத்துக்கொள்ளும்; பின்னங்கால்களால் குதித்து ஓடும்.

### பயிற்சி :

1. எதிர்ச்சொல் எழுது :—வசதி, ஊக்கம், உறங்கு, நார்.

2. ஆற்றல், பேராபத்து, கண்டன, கேட்டன, கடற் செலவு—இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டு.

### விஞக்கள் :

1. இளமைப்பருவத்தில் குக்கு விரும்பியது என்ன ?

2. குக்கு ரியோ-டி-ஜனீரோவை விட்டு நீங்கக் காரணம் என்ன ?

3. டாக்டர் சோலந்தருக்கு ஏற்பட்ட ஆபத்து யாது ?

4. டஹிட்டித் தீவில் குக்கு எவ்வாறு வரவேற்கப்பட்டார் ?

5. டஹிட்டித் தீவு மக்களைப்பற்றி நீ அறிந்ததென்ன ?

6. குக்குத் தலைவரை வரவேற்காதவர் யாவர் ?

7. 'பாட்டனி பே' என்பது எங்குள்ளது ?

8. ஆஸ்திரேலியாவிலுள்ள விசித்திரப் பிராணி எது ? அதன் இயல்பு என்ன ?

9. குக்குவின் கடற்செலவு மக்களுக்கு எவ்வாறு பயன்பட்டது ?

### கட்டுரையாக்கப் பயிற்சி :

'குக்குவின் கடற்செலவும் பஸிபிக்குத் தீவுகளும்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

### இலக்கணம் :

1. மக்கள் உயரமானவர்கள் ? பழுப்பு நிறம் வாய்ந்தவர்கள் ; தினந்தோறும் குளிப்பவர்கள்—இத்தனி நிலை வாக்கியங்களைச் சேர்த்துத் தொடர் வாக்கியமாக்கு.

2. உடன் சென்றவர் நெருப்பு மூட்டி அவரை விழித்தெழச் செய்தனர்—இதனை இரண்டு தனி நிலை வாக்கியங்களாகப் பிரித்தெழுது.

3. நான்காம் பத்தியிலிருந்து தனி நிலை வாக்கியங்களை எடுத்தெழுதி, அவற்றைத் தொடர் வாக்கியங்களாக்கு.

4. ஐந்தாம் பத்தியினின்று தொடர் வாக்கியங்களை எடுத்தெழுதி, அவற்றைத் தனி நிலை வாக்கியங்களாகப் பிரித்தெழுது.

# 5. பண்டைத் தமிழர் வாணிகச் சிறப்பு

1. பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் கல்வி, கைத்தொழில், வாணிகம், உழவுத் தொழில் முதலிய பல துறைகளிலும் சிறந்திருந்தார்கள். அவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பிற-நாட்டவரோடு வாணிகம் நடத்தி வந்தார்கள். **கிரீஸ் உரோமாபுரி** முதலிய இடங்களிலிருந்த மக்கள் தமிழ் நாட்டிற்கு வந்து, தமிழ் நாட்டின் விளைபொருள்களை வாங்கிச் சென்றார்கள். மேலைக் கடற்கரையிலுள்ள **முசிறி** என்னும் துறைமுகப்-பட்டினம், கப்பல்கள் தங்குவதற்கு ஏற்ற துறை-முகமாய் இருந்தது.

2. முசிறித் துறைமுகம் சேரர்களுக்கு உரியது. யவனர்களுடைய கப்பல்கள் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து, மிளகை வாங்கிக்-கொண்டு மீளும். தேன் வகைகள் நம் நாட்டிற்கு வருதல் உண்டு. அரசர்கள் அவற்றை விரும்பிப் பெற்று அருந்தி இன்பமடைவார்கள். ஈயம், கண்ணாடி முதலியனவும் பிற நாடுகளினின்றும் கொண்டு வரப்பட்டன. தமிழ் நாட்டினின்றும் யானைத் தந்தம், வயிரம், பவளம், வெற்றிலை, பட்டாடை, நெய், தோகை, குரங்கு, கடுவாய், யானை, மயில், கிளி முதலியவற்றைப் பிற நாட்டு வணிகர் கொண்டு சென்றனர்.

3. அக்காலத்தில் மேலைக் கடல் சேரவேந்த-ருக்கு உரியதாயிருந்தது. அக்கடலில் அவருடைய கலங்களே செல்லும். அவர் அவற்றின் பாது-காப்பிற்காகக் கடற்படை வைத்திருந்தனர். சேர

நாட்டுக் கடற்கரையையடுத்து வெள்ளைத் தீவுகள் உள்ளன. அவற்றில் **கடம்பர்** என்னும் கடற்கொள்ளைக்காரரர் இருந்தனர். அவர்கள் மேலைக்கடலிற் செல்லும் கலங்களிலுள்ள வாணிகப் பொருள்களைக் கொள்ளையிட்டார்கள். கலத்தில் ஏற்றிய சரக்குக் கரை சேர வேண்டுமேயென வணிகர் கவலையுற்றனர். சேரவரசர் அக்கடம்பரை வென்று, வணிகரின் கவலையைப் போக்கினர். இதனால், சேரர் வணிகர் நலங்கருதிக் கடற்படை வைத்திருந்தமை நன்கு விளங்கும்.

4. சோழருக்கு உரிய துறைமுகம் **புகார்**. அங்கு வாணிகஞ் செய்யக் கிரேக்கரும் உரோமரும் வந்தனர்; அரசரிடம் பணியாளராகவும் அமர்ந்தனர். அவர்களோடு தமிழ் மக்கள் அன்புடன் பழகினர்கள். பல மொழி பேசும் மக்களும் கலந்து வாழ்ந்தார்கள். ஈழநாட்டினின்றும் உணவுப் பொருள்களும், கடாரத்தினின்றும் விளைபொருள்களும், இமயமலையினின்றும் கங்கைநதியினின்றும் மணியும் பொன்னும், பொதியில் மலையினின்றும் ஆரமும் அகிலும், தென்கடலினின்றும் முத்தும், கீழ்க்கடலினின்றும் பவழமும், மேல் மலையினின்றும் மிளகும், பிறநாடுகளினின்றும் குதிரைகளும், கருப்பூரமும் புகார்த் துறைக்கண் வந்திறங்கின. நிலத்தில் வந்த பொருள்களைப் **புலிப்பொறி** பொறித்துக் கலத்தில் ஏற்றுவர். பொருள்களைக் காவலர் காவல் புரிந்தனர். ஆதலின், கள்வர் அவற்றைக் கவர அஞ்சுவர்.

5. பாண்டி நாட்டு மதுரையில் பல விதப் போர்க் கருவிகளும் விற்கப்பட்டன. செம்பு, வெண்கலம் முதலியவற்றால் செய்யப்பட்டபொருள்-

கள் கடைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. நவமணிக் கடைகளும், பொன் கடைகளும் அழகு பெற்று விளங்கின. பட்டாடைகளும், பருத்தியாடைகளும், நவதானியங்களும் அங்குக் காணப்படும். வாணிகப் பொருள்கள் தமிழ் நாட்டில் செய்யப்பட்டனவாகவேயிருந்தன. இதனுல், நமது நாட்டில் பல வகைத் தொழில்களும் நடைபெற்றன என்பது தெரிய வரும்.

6. உள் நாட்டு வாணிகமும் நன்கு நடைபெற்றது. வணிகர் கோவேறு கழுதை மீதும் எருதின் மீதும் பொருள்களை ஏற்றிச் சென்றனர். வணிகர் கூட்டம் கூட்டமாகவே சென்றனர். வணிகர் கூட்டத்தை **வாணிகச் சாத்து** என்று வழங்கினர். வணிகர் பொருள்களைத் தாம் வாங்கிய விலைக்குக் குறைவாகவும், மிகுதியும் ஊதியம்பெற மிக்க விலைக்கும் விற்பதில்லை. அவர்கள் கொடுப்பதில் குறைப்பதுமில்லை; கொள்வதில் மிகுதி பெறுவதுமில்லை. இக்காரணங்களால் மக்கள் வணிகர் மீது நம்பிக்கை கொண்டார்கள். அதனுல், வாணிகமும் வளர்ந்தது. மக்களின் நலம் கருதிய வாணிகமே நாட்டில் நிகழ்ந்தது. மேற்கூறியவற்ருல், பண்டைத் தமிழ் நாட்டின் வாணிகச் சிறப்புத் தெரியவரும்.

**சொற்பொருள் விளக்கம் :**

பட்டினம் - கடற்கரையிலுள்ள ஊர், யவனர் - உரோம கிரேக்கருக்குத் தமிழர் வழங்கிய பெயர், கலம் - கப்பல், புகார் - காவிரிப்பூம்பட்டினம், ஈழநாடு - யாழ்ப்பாணமும் இலங்கையும், கடாரம் - பர்மாவும் மலேயாவும், ஆரம் - சந்தனம், பொறி - அடையாளம், பொறித்தல் - பதித்தல், நவமணிகள் - வயிரம்,

மரகதம், மாணிக்கம், புருடராகம், வைடூரியம், நீலம், கோமேதகம், முத்து, பவழம் என்பன.

### பயிற்சி :

1. எதிர்ச் சொற்கள் எழுது :—ஏற்றி, தென்கடல், கொள்வது, நம்பிக்கை.

2. பிரித்தெழுது :—இரண்டாயிரம், பட்டாடை, கீழ்க்கடல், மகிழ்ச்சியடைவர்.

### வினாக்கள் :


1. பண்டைத் தமிழ் நாடு எவ்வெவற்றில் சிறந்திருந்தது?
2. சேரர்களுக்குரிய துறைமுகம் யாது ?
3. நம் நாட்டினின்றும் ஏற்றுமதியான பொருள்கள் யாவை ?
4. நம் நாட்டினர் பிற நாடுகளினின்றும் பெற்று வந்த பொருள்கள் என்ன ?
5. வாணிகப் பாதுகாப்புக்காக அரசர் செய்தது என்ன ?
6. மதுரை நகரில் விற்கப்பட்ட பொருள்கள் யாவை ?
7. தமிழ் நாட்டில் உள்நாட்டு வாணிகம் எவ்வாறு நடைபெற்றது ?
8. முற்காலத் தமிழ் வணிகர் தன்மை யாது ?

### கட்டுரையாக்கப் பயிற்சி :

'சேரனும் வாணிகமும்', 'பண்டைத் தமிழரும் பிற நாட்டு வணிகரும்'—இவற்றைப் பற்றிக் கட்டுரை எழுது.

### இலக்கணம் :


சேரவரசர், அக்கடம்பரை வென்று, வணிகரின் கவலையைப் போக்கினர்—இவ்வாக்கியத்தைச் சிறு வாக்கியங்களாகப் பிரித்தெழுது.



## 6. வானவூர்தி

1. மக்கள் தங்கள் நுட்ப மதியால் பற்பல புதுமைகளைக் கண்டறிந்திருக்கிறார்கள். இப்பொழுது நாம் வீட்டிலிருந்துகொண்டே உலகின் பல பாகங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிகின்றோம்; பாடகரின் பாடல்களைக் கேட்டு இன்புறுகின்றோம்; சிறுவர்க்கான கதைகளும், சொற்பொழிவுகளும் நம் செவியிற்படுகின்றன. இவை எதனால் நடைபெறுகின்றன? இவை **வானொலியாகிய 'ரேடியோ'** என்ற கருவியினால் நடைபெறுவனவேயாகும். வீட்டிலுள்ள மின்சார விசிறியின் விசைத் திருகைத் திருகுகின்றோம்; இனிமையாகக் காற்று வீசுகின்றது. மற்றொன்றைத் திருகுகின்றோம்; விறகின்றி உணவுப் பொருள்கள் உண்பொருளாக வேக வைக்கப்படு-

கின்றன. நமது வாழ்க்கையில் நாம் கண்டு அனுபவிக்கும் திரைப் படங்கள், கம்பியில்லாத் தந்திகள், தொலையொலினிகள், மின்சார விளக்குகள், மின்சார விசிறிகள் முதலியன விஞ்ஞானிகள் இடைவிடா உழைப்பாற்கண்ட புதுமைகளாய்த் திகழ்கின்றன. இவையேயன்றி, மனிதனது கனவை நனவாக்கிய புதுமை ஒன்றும் உள்ளது. அதுவே ஆகாயத்திற் பறத்தல்.



2. பறவைகள் ஆகாயத்திலே பறத்தலைக் கண்ட மனிதன், தானும் பறக்க முயன்றான். அவன் முதலில் இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறக்க முயன்றான்; கீழே விழுந்தான். அத்துடன் அம்முயற்சியைக் கைவிட்டானா? இல்லை. காற்றை ஒரு பெரிய பைக்குள் அடைத்துப் பந்து போலக் கட்டிப் பந்தைச் சுற்றிலும் வலிய கயிறுகளைச்

சுற்றி, அக்காற்றுப் பந்துக்குக் கீழே ஓர் ஆள் தங்கியிருக்கத் தக்கவாறு பெரிய கூடையைத் தொங்கவிட்டான். காற்றைவிட மெல்லிய அப்பந்து உயரப் பறந்து சென்றது; பத்து நிமிடம் ஆகாயத்திலே தங்கிப் பின்பு கீழிறங்கிவிட்டது. இவ்வாறு செய்தவர் **டாக்டர் ஜெப்ரிஸ்** என்ற அமெரிக்க விஞ்ஞானியாராவர். அவர் மீண்டும் ஒரு புகைக்கூண்டு செய்து தம்முடன் இருவரை அதில் அழைத்துச் சென்றனர்.

3. **சார்லஸ்** என்னும் **பிரான்ஸ்** தேச விஞ்ஞானியார், 1783-ஆம் ஆண்டு **ஹைடிரஜன்** என்னும் வாயுவின் உதவிகொண்டு புகைக்கூண்டு செய்து, வானத்தில் இரண்டு மணி நேரம் பறந்து, இருபத்தேழு மைல்களுக்கப்பால் சென்று, கீழே இறங்கினர். **ஜான் ஓய்ங்** என்ற அமெரிக்கர் ஆயிர மைல்கள் புகைக்கூண்டில் பறந்து சென்றார். அப்புகைக் கூண்டுகள் காற்றடித்த திசையே சென்றனவே அன்றி, அவற்றில் அமர்ந்திருப்பவர் விரும்பிய இடங்களுக்குச் செல்லவில்லை. அதனால், பலர் கடலில் விழுந்து இறந்தனர். பின்னரே மக்கள் விரும்பிய இடத்துக்குச் செல்லுதற்குரிய சுக்கான் அமைந்த **ஆகாய விமானம்** எனப்படும் **வானவூர்தி** கண்டுபிடிக்கப்பட்டது.

4. சிலர் வானவூர்திகளை இயக்குவதற்கு வாயு எந்திரங்களைக் கண்டுபிடித்தனர். இதன் பின்பு பெட்டுரோல் திரவத்தால் ஓடும் எந்திரங்கள் ஏற்பட்டன. **ஸாண்டாஸ்மோண்டு** என்பவர் மோட்டார் எந்திரத்தினால் ஒரு விமானத்தை அமைத்து, ஆகாயத்திற் பறந்தார். பிறர் வெவ்வேறு விதமான இயந்திரங்களால் விமானங்களை அமைத்தனர்.

ஆனால், இக்கால வானவூர்திகள் உண்டாதற்குக் காரணமாயிருந்தவர்கள் **ரைட்டுச் சகோதரர்கள்** ஆவார்கள். அவர்களே முதலில் இறக்கைகள் அமைந்த வானவூர்தியை அமைத்தவர்கள். நாம் காணும் புதிய ஊர்திகள் யாவும் தோன்றுவதற்கு அவர்கள் செய்த விமானமே காரணமாயிருந்தது. ஆகாய ஊர்திகளுள் ஒற்றைச் சிறகு விமானம், இரட்டைச் சிறகு விமானம், முச்சிறகு விமானம் எனப் பல உண்டு. இவை பிரயாணிகளை ஏற்றிச் செல்லவும், பொருள்களைச் சுமந்து செல்லவும் பயன்படுகின்றன.

5. வானவூர்திகள் தங்கும் நிலையங்களுக்கு **விமானத்துறை** அல்லது **விமான நிலையம்** என்பது பெயர். அவை பரந்த வெளிகளில் அமைக்கப்பட்டிருக்கும். விமான நிலையங்களில் பணி புரிபவர் மிகக் கவனமாய் இருத்தல் வேண்டும். வானவூர்திகள் பழுதுறுமல் செல்லுவதற்கு, அவற்றைச் சோதித்துப் பழுது பார்க்கும் பொறி வல்லுநர் அங்கு இருக்கின்றனர். ஒரு விமானம் ஆகாயத்திற்செல்லுமுன் அதனை நன்கு ஆராய்ந்து, பின்னரே செல்லுவதற்கு அனுமதியளிப்பர். புயற்காற்று வீசும் பொழுது விமானங்களை இறங்கவிடாது, பிறிதொரு விமான நிலையத்துக்குச் செல்லுமாறு விமானிக்குக் கம்பியில்லாத் தந்தி மூலம் தெரிவிப்பர். இப்பணி புரிபவர் சிறிது கவனக்குறைவுடன் இருப்பரேல், பல உயிர்கள் மடியக் காரணமாவர். வானிலையை அறிந்து, உடனுக்குடன் விமானிகளுக்குத் தெரிவித்து, விமானச் சேதங்களை நீக்குவது இவர் கடமை. விமான நிலையங்களில் பிரயாணிகள் கொண்டு

செல்லும் பொருள்களை நிறுத்துக் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமான எடையுள்ள பொருள்களைக் கொண்டு செல்லாதபடி தடுப்பதற்குத் தனிப்பட்ட பணியாளருளர். குறிப்பிட்ட அளவுக்குமேல் பாரமான பொருள்களை ஏற்றிச்செல்வதும் விமானம் சேதமுறுவதற்கு மற்றொரு காரணமாகும். மாலைப்பொழுதில் விமான நிலையம் மின்சார விளக்குகள் மிளிர அழகிய காட்சியளிக்கும். கீழிறங்கும் விமானங்கள் தம் எல்லை மீறிக் கட்டடங்களில் மோதாதிருக்கும்படி செந்நிற விளக்குகள் காண்பிக்கப்படும்.

6. வானவூர்தி கண்டுபிடிக்கப்பட்டமையின், உலகில் வாணிகம் பெருகியுள்ளது. மக்கள் பல நாட்கள் பிரயாணம் செய்து அடைவதற்குரிய தொலைவுள்ள இடங்கள், மிக அண்மையவை ஆகிவிட்டன. மூன்று நாட்களில் இந்தியாவினின்றும் அமெரிக்கா சென்றுவிடலாம். கப்பலில் பதினெட்டு நாள்முதல் மூன்று வாரம்வரை பிடித்துவந்த இங்கிலாந்து செல்லும் ஐயாயிரம் மைல் பிரயாணத்தை இப்போது வானவூர்தி மூலமாக ஒரே நாளில் முடித்துவிடலாம். செல்வர்களும், நாட்டுத் தலைவர்களும் அயல் நாடுகளுக்கு வானவூர்தியில் செல்வதால், குறுகிய காலத்தில் தங்கள் வேலைகளை முடித்துத் திரும்புகின்றனர். வானவூர்தி மணிக்கு அறுநூறு மைல் தூரம் செல்லும் வன்மை உடையது. ஜெட்டு **விமானம்** என்பது கடிது செல்லும் விமானங்களுள் ஒன்றாகும்.

7. வானவூர்திகள் மக்களுக்கு ஆக்கம் அளிக்கும் வகையில் பயன்படுகின்றன. மலேரியாவைப் போன்ற நோய்களைத் தடுப்பதற்குக் கொசுக்களின்

முட்டைகளை அழிக்க ஆகாய விமானத்தின்மீது சென்று மருந்துகளைத் தூவுகின்றனர்; நோயாளி-களைக் கடிதில் ஒரு நாட்டினின்றும் பிற நாட்டிற்கு எடுத்துச் செல்கின்றனர். மலைகளின் உயரத்தை அறிவதற்கும், புதிய இடங்களைக் காண்பதற்கும் இவை பெரிதும் உதவுகின்றன. ஆயினும், ஆக்க-வேலைக்குப் பயன்படும் இவை, அழிவு வேலைக்-கும் பயன்படுகின்றன; போர்க்காலங்களில் பகை-வர் நாட்டு மக்கள்மீதும், கட்டடங்கள்மீதும், கப்பல்கள்மீதும் குண்டுகளைப் பொழிந்து உயிர்ச்-சேதம் பொருட்சேதங்களைப் பேரளவில் உண்டு-பண்ணுகின்றன. மக்கள் தங்கள் அறிவு வன்மை-யாற்கண்ட சாதனங்களை மன்பதையின் நலனுக்-குப் பயன்படுத்துவார்களாயின், அதுவே மக்கள் நல்வாழ்வு நடத்தப் பெரிதும் துணை செய்யும்.

### சொற்பொருள் விளக்கம் :

நுட்பமதி - கூரிய அறிவு, இன்புறுதல் - மகிழ்தல், பணி புரிவோர் - வேலை செய்பவர், பழுது - கேடு, பொறி வல்லுநர் - எந்திர நிபுணர், கடிது - வேகமாய், மன்பதை - மக்கள் சமுதாயம்.

### பயிற்சி :

கடிது, வன்மை, பொழிந்து, காட்சி—இவற்றை வாக்கியங்-களில் அமைத்துக் காட்டு.

### வினுக்கள் :

1. அறிவின் நுட்பத்தால் மக்கள் கண்டுபிடித்துள்ள புதுமைகள் எவை?

2. முதன்முதல் மனிதன் எதன் உதவியால் பறக்க முயன்ருன்?

3. பறக்க முயன்றவர் கடலில் விழக் காரணம் என்ன?

4. வானவூர்தியின் எந்திரங்கள் எவற்ருல் இயங்குகின்றன?

5. இக்கால ஆகாய விமானங்களை அமைக்க வழி காட்டியவர் யாவர்?

6. ஆகாய விமானங்களால் மக்கள் அடையும் பயன்கள் யாவை?

7. அழிவுக்குக் காரணமாய் அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?

### கட்டுரையாக்கப் பயிற்சி :

'வானவூர்தியின் வளர்ச்சியும் பயனும்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

### இலக்கணம் :

சிலர் சில சொற்களைப் பிழையாகப் பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆதலின், அவற்றைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவற்றைக் கவனி :—

| பிழையானவை | சரியானவை |
| --- | --- |
| வேண்டாம் | வேண்டா |
| குடுத்தான் | கொடுத்தான் |
| எடஞ்சல் | இடைஞ்சல் |
| தலகாணி | தலையணை |
| சிலவு | செலவு |
| உடமை | உடைமை |

# 7. தலையாலங்கானத்துப் போர்

1. பண்டைக் காலத்தில் நமது தமிழ் நாட்டைச் **சேர சோழ பாண்டியர்** என்ற மூவேந்தர் ஆண்டு வந்தனர். அவர்கள் குடிகளுக்கு அரசனே உயிராவான் என்ற உண்மையை உணர்ந்து, அறங்கெடாமல் அரசியல் நடத்துபவர்களாயிருந்தார்கள்; மக்களுக்குக் கொடுமை செய்யின், அவர்கள் அதனைப் பொறுக்க முடியாமல் பெருக்கிய கண்ணீரே தங்கள் குடியையும் செல்வத்தையும் அழிக்கும் படையாகுமென எண்ணி, அருளாட்சி நடத்தி வந்தார்கள். இவ்வாறு குடிகளின் அன்பைப் பெற்று, வீரம் மிக்கவர்களாய் ஆண்ட அரசர்களுள் ஒருவனே **பாண்டியன் நெடுஞ்செழியன்.**

2. நெடுஞ்செழியன், சுமார் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர்ப் பாண்டிநாட்டை ஆண்ட புரவலன். அவன் குடிகளைத் தன்னுயிரே போல எண்ணிப் பாதுகாத்து வந்தான். குடிகளும் ஒரு குறைவுமின்றி வாழ்ந்து வந்தார்கள். நாடும் வளம் பெற்றது. **மாங்குடி மருதனார்** என்னும் தண்டமிழ்ப் புலவர் அம்மன்னனது செங்கோலாட்சியைச் சிறப்பித்து, "இவ்வுலகத்தில் காற்றுப் பருவத்தில் வீசுவதற்கும், உடுக்கள் நெறிபிறழாது செல்லுவதற்கும், சூரியனும் சந்திரனும் ஒளி மங்காதிருப்பதற்கும், காலமழை தவறாது பெய்து வயலிலிட்ட வித்து ஒன்று ஆயிரமாகப் பயன் கொடுப்பதற்கும் முறை தவறாத உனது ஆட்சியே காரணமாகும்," எனக் கூறியுள்ளனர். தமிழ்ப்

புலவரிடத்தும் அவ்வரசன் மிகுந்த அன்புடையவன். அவனைப் புகழ்ந்து மாங்குடி மருதனர் **மதுரைக்காஞ்சி** என்னும் நூலைப் பாடியிருக்கிருர்.

3. அக்காலத்து அரசர்கள் வீரத்திலும் கொடையிலும் சிறந்தவர்கள். அதனுற்ருன் வீரத்தையும் கொடையையும் ஒருங்கே புகழ்வது பண்டைக்காலத்தவர் வழக்கமாய் இருந்து வந்தது. அரசர்கள் வீரத்தையும் கொடையையும் இரு கண்களாகவே போற்றினுர்கள். நெடுஞ்செழியன், தன்னிடம் வரும் புலவர் இரப்போர் யாவர்க்கும் ‘இல்லை’ என்னுது வழங்கி வந்தான். புலவரும், பாணரும், கூத்தரும் அவனது புகழைப் பரப்பினர். அவனது புகழ் சேர சோழ நாடுகளிலும் பரவியது. சேர சோழ மன்னர் அவன் மீது பொருமை கொண்டனர். ஆயினும், அவர்கள் அவனது வீரத்திற்கு அஞ்சினுர்கள். அதனல், அவனுடன் போர் செய்ய முன் வரவில்லை. ஆனல், **யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரல் இரும்பொறை** என்ற சிற்றரசன், பொருமையினுல் நெடுஞ்செழியனது போர் வன்மையை அறியாமல், அவனை எதிர்த்தான். புலியுடன் பூனை பொருது வெற்றி பெறுதல் முடியுமோ? நெடுஞ்செழியன் அவனைத் தோற்கடித்து, நல்லுரை கூறியனுப்பினன். இதனுல், செழியனது வீரப்புகழ் மிகுந்தது.

4. பிற தமிழ் மன்னர்களின் பொருமைத் தீ மேலும் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. அவர் யாவரும் ஒன்றுகூடிச் செழியனைப் போரில் வெல்ல எண்ணினர். சேரசோழருடன், **திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான்,**

**பொருநன்** என்ற ஐம்பெரு வேளிரும் சேர்ந்து-கொண்டனர். இதனை அறிந்த செழியன், அவர்-களது அறியாமைக்கு இரங்கினன்; அவர்கள் தன்னை எளியனாக நினைத்துத் தன்னுடன் போர் செய்ய முற்பட்டதை எண்ணிக் கோபங்கொண்ட-னன். "நான் இப்போரில் வெற்றி பெறுவிடில் என் குடிகள் என்னை இகழ்வார்களாக!" என வஞ்சினங்கூறி, அவர்களை எதிர்க்கச் சென்றான்.



5. மதுரைக்கு அருகில் இரு படைகளுக்கும் போர் நிகழ்ந்தது. சிறிது போழ்தில் யானைகளும், குதிரைகளும், வீரர்களும் நிறைந்திருந்த போர்க்-களம் பிணக்களமாயிற்று. பகைவர் புறங்காட்டி-யோடினர். பாண்டியன் அவர்களைத் தொடர்ந்து சென்றான்; தலையாலங்கானம் என்னும் இடத்தில் அவர்களை முற்றிலும் அழித்தான். இவ்வெற்றிக்-

குப்பின் அவன் **தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்** என்று சிறப்பிக்கப்பட்டான்.

6. இவ்வாறு நெடுஞ்செழியன் தனியனாய் நின்றே, சேர சோழர்களையும், ஐம்பெரு வேளிரையும் வெற்றி கொண்டான். குடிகளுக்கு அவன்மீது அன்பும் மதிப்பும் பெருக இதுவும் காரணமாய் அமைந்தது. இப்போரில் தோற்றோடிய வேளிர்க்குரிய **மிழலைக்கூற்றம், முத்தூர்க்கூற்றம்** என்பவற்றைத் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டான். இப்போர் நடைபெற்ற சமயத்து அவன் மிகவும் இளைஞனாயிருந்தனன் என்பது அவனைப்பற்றிய புலவரொருவர் பாடிய பாடலால் தெரியவருகிறது. வயதில் இளைஞனாயினும், அறிவிலும் ஆண்மையிலும் முதிர்ந்தவனாகவே விளங்கினன் அவ்வரசன். அவன் போரிற்புண்பட்ட வீரர்களைத் தானே நேரிற்சென்று கண்டு, அன்புடன் இன்சொற்கூறிப் பாராட்டும் வழக்கமுடையவன்.

7. அம்மன்னன் கல்வியிற்சிறந்தவன்; கற்றோர்பால் பேரன்பும் பெருமதிப்பும் உடையவன். **நெடுநல்வாடை** என்ற நூலும், அவன்மீது பாடப்பட்டதேயாகும். அறிவும் திருவும் சிறந்த அவ்வரசன் தமிழ் மக்களால் என்றும் பாராட்டுதற்குரியவன். செங்கோற்சிறப்பிற்கும் வீரத்திற்கும் அவன் எடுத்துக்காட்டு ஆகத் தக்கவன்.

**சொற்பொருள் விளக்கம் :**

வேரறுக்கும் - அடியுடன் அழிக்கும், புரவலன் - அரசன், உடு-நட்சத்திரம், வேளிர் - குறுநில மன்னர், ஆண்மை - வீரம், செரு - போர், வஞ்சினம் - சபதம்.

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுது :—அறம், குறைவு, இளைஞன், கற்றோர்.

2. பிரித்தெழுது :—மூவேந்தர், தன்னுயிர், அருளாட்சி, நல்லுரை, ஐம்பெருவேளிர்.

### வினாக்கள் :

1. பண்டை மன்னர் குடிகளை எவ்வாறு ஆண்டுவந்தனர்?
2. மாங்குடி மருதனார் செழியனை எவ்வாறு புகழ்ந்தனர்?
3. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாராட்டும் நூல்கள் யாவை?
4. நெடுஞ்செழியன் வீரம் எவ்வாறு அறியப்படும்?
5. அவனை எதிர்த்த குறுநில மன்னர் யாவர்?

### கட்டுரையாக்கப் பயிற்சி :

'தமிழ் மன்னரும் செங்கோலாட்சியும்', 'தலையாலங்கானத்துப் போர்'—இவற்றைப்பற்றிக் கட்டுரை எழுது.

### இலக்கணம் :

கீழ் வரும் வாக்கியங்களிலுள்ள வழூஉச் (பிழையான) சொற்களைத் திருத்தி எழுது :—

நேத்துப் பள்ளிக்கூடம் இல்லை.

உன் தந்தையார் எவ்வளவு பணம் சிலவு செய்தார்?

தலகாணிக்காக இரண்டு ரூபா சிலவழித்தேன்.

என்னைத் தொந்திரவு செய்யாதே.

உனக்கு வெக்கம் இல்லையா?

அவன் முழிக்கிறான்.

# 8. இன்பச் செலவு


## (ஒரு கடிதம்)

இராதாபுரம்,
20–9–1954.

அன்புள்ள சுந்தரம்,

எங்கள் பள்ளியாசிரியரும் மாணவர் இருபது பேரும் வரலாற்றுச் சிறப்புடைய செஞ்சிக்-கோட்டையைக் கண்டு களிக்கச் சென்றோம். எங்களூரினின்றும் 11-8-1954 காலை எட்டுமணிக்கு மோட்டார் வண்டியிலமர்ந்து திருநெல்வேலிக்குச் சென்றோம். அங்குப் பொருனையாற்றிற்குளித்து, யாங்கள் எங்களுடன் கொண்டு சென்றிருந்த கட்டமுதைச் சாப்பிட்டோம். நண்பகல் பன்னிரண்டரை மணிக்குப் புறப்பட்டுப் புகைவண்டிக்குப் பிரயாணச் சீட்டுப் பெற்று, அதில் ஏறினோம். எங்களுட்பலர் முன்னர்ப் புகைவண்டித்தொடரில் பிரயாணம் செய்யாதவர். ஆதலின், அவர்கள் வண்டி ஓடும்போது மரங்களும் தந்திக்கம்பிகளும் ஓடுவது போலத் தோன்றுவதைக் கண்டு பேராச்சரியமுற்றார்கள். **மணியாச்சிச் சந்திப்பில்** நாங்கள் வண்டியிலிருந்து இறங்கிச் சென்னைக்குச் செல்லும் புகைவண்டித்தொடரில் ஏறினோம். இதுகாறும் நிலையந்தோறும் நின்று நின்று தாமதித்து வந்த புகைவண்டி, இப்பொழுது மிக வேகமாகச் சென்றது. சிறிய நிலையங்களில் நில்லாது, கம்பீரமாக அவற்றைக் கடந்து சென்றதைக் கண்ட நாங்கள் அளவில்லா மகிழ்ச்சியடைந்தோம்.

விருதுநகர், மதுரை, சோழவந்தான், திண்டுக்கல், திரிசிராப்பள்ளியாகிய இடங்களைக் கடந்து இறுதியாகத் திண்டிவனத்தை அடைந்தோம். அங்கு மோட்டாரில் ஏறிச் செஞ்சி வந்து சேர்ந்தோம். ஒரு காலத்தில் அரசர்களுக்குரிய அரணாய் விளங்கிய கோட்டை பாழடைந்த கோட்டையாய்க் காட்சி அளித்ததைக் கண்டு பெரிதும் ஏமாற்றம் அடைந்தோம். இது முக்கோண வடிவில் ஏறக்குறைய ஐந்து மைல் சுற்றளவில் பரந்து



கிடக்கின்றது. தெற்கில் **சந்திரகிரியும்**, தென்மேற்கில் **இராசகிரியும்**, வடக்கில் **கிருஷ்ணகிரியும்** இருக்கின்றன. இவற்றை இணைத்து இக்கோட்டை கட்டப்பட்டுள்ளது. சந்திரகிரியையும் கிருஷ்ணகிரியையும் சேர்த்துக் கிழக்கில் முப்பது அடி உயரமுள்ள மதிலும், அதனையடுத்து அகழியும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்குப் பக்கத்தில் இராசகிரியையும் கிருஷ்ணகிரியையும் சேர்த்து மற்றோர் மதிலும் அகழியும் காணப்படுகின்றன. அகழி தூர்ந்து கிடக்கின்றது.

**புதுச்சேரி வாயில்** என்ற பழைய வாயில் வழியாக உள்ளே சென்ருேம். இராசகிரி மலையைச் சார்ந்த கட்டடங்கள் நன்கு தெரிந்தன. வாயிலின் மண்டபத்தில் இரகசிய அறைகள் உள்ளன. எதிரிகளின் கண்ணிற்படாமல், அவர்களைத் தாக்குவதற்கு இடைவெளிகளிருக்கின்றன. இம்மண்டபத்தின் அருகில் முன்னுள் சிறைச்சாலை மண் மேடாய்க் கிடக்கின்றது. தென்கிழக்கு மூலையில் வேங்கடராமன் கோவில் இருக்கின்றது. அதனுள் தெளிந்த நீரையுடைய கிணறு உள்ளது. இராசகிரியைச் சேருமிடத்தில் மசூதியொன்று நல்ல நிலையிற் காணப்படுகின்றது. மதிலையடுத்து உள்ளே ஐந்து மண்டபங்கள் இருக்கின்றன. மண்டபங்களுக்கு அப்பால் அரச குடும்பத்தினர் வாழ்ந்த இடம் பெருவெளியாய்க் காணப்படுகின்றது. **கலியாண மகால்** என்னும் ஏழடுக்குடைய கட்டடம் இன்றும் அழகுடன் விளங்குகின்றது. அதன் எதிரில் குதிரை இலாயங்கள் உள்ளன. அதற்குத் தெற்கிலுள்ள மண் மேடு அரண்மனையின் அந்தப்புரப் பகுதியாயிருந்ததாம். **ஆனைக்குளம்** என்ற குளத்தின் முன் அழகிய மண்டபம் ஒன்றுள்ளது. அதன் மூலையில் இரகசிய வழி ஒன்று காணப்படுகின்றது. குளத்தினருகே மேற்கில் களஞ்சியம் காணப்படுகின்றது. வாயிற்பக்கம் உள்ள ஒரு சிறிய அறையைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் மூன்று பெரிய அறைகள் இருக்கின்றன. அவற்றில் நெல்லும், கம்பும், கேழ்வரகும் சேமிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். தென்மேற்கே ஒரு கோயிலும் மடமும் அழிவுற்ற நிலையிலிருக்கின்றன. மதிலைக் கடந்து வெளியே

சென்ருல், சிதைந்த கட்டடங்கள் பல காணப்படு-கின்றன. இரண்டு சிறு குளங்களும் உள்ளன.

வளைந்து வளைந்து செல்லும் பாறைகள் வழி-யாகச் சென்று செங்குத்தான குன்றை அடைந்-தோம். நாங்கள் சென்றடைந்த இடத்துக்கும் குன்றுக்கும் நடுவிலுள்ள முப்பது அடி இடை-வெளியைக் கடக்க மரப்பாலம் ஒன்றுள்ளது. அப்-பாலத்திற் செல்லுகின்றவர்கள் முதலில் சிறிது அச்சமுறுகின்ருர்கள். பகைவர் வாராதபடி தடை



செய்வதற்கு அப்பாலம் முன்பு இழுவைப் பால-மாய் இருந்தது என்பர். செங்குத்தான பகுதியி-லும் பல கட்டடங்கள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று நெற்களஞ்சியம்; மற்ருென்று, காவல் மண்டபம்; பிறிதொன்று, பணஞ் சேர்க்கும் கரு-வூலம். அவ்வறையின் மத்தியில் நாணயங்களைப்

போட உண்டித் துளையுண்டு. நீர்ச்சுனையொன்று ஒரு பெரும்பாறையின் அடியிலுள்ளது. அதனை அடுத்துக் கொடி மேடையொன்று அப்பிரதேசம் முழுமையும் தெரியும்படியான இடத்தில் அமைந்துள்ளது. அதனருகே அரங்கநாதர் கோவிலும், சிவபிரான் கோவிலும் உள்ளன.

இராசகிரியிலிருந்து கிருஷ்ணகிரி சென்றோம். அதில் ஏறச் செம்மையான படிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் உச்சியிலும் அழகிய மண்டபங்களும், கோயில்களும், கட்டடங்களும் காணப்படுகின்றன. மூடு கிணறு போன்ற கட்டடமொன்று உள்ளது. அதனை **எண்ணெய்க் கிணறு** என வழங்குகின்றனர். அங்கு ஒரு சபா மண்டபம் அழகிய மேடையையும், நான்கு திண்ணைகளையும் கொண்டு விளங்குகின்றது. மெல்லிய பூங்காற்று அங்கு வீசிக்கொண்டேயிருக்கின்றது.

செஞ்சிக்கோட்டை சீர் குலைந்து பாழடைந்து கிடப்பினும், அதன் மீதுள்ள இடிந்து போன கட்டடங்கள் முற்கால அரசரின் அறிவு ஆற்றலையும் வீரத்தையும் விளக்கும் சின்னங்களாகவே விளங்குகின்றன. அவற்றைக் கண்டு புது ஊக்கம் பெற்ற நாங்கள், மலையடிவாரத்தை அடைந்து, மோட்டாரில் ஏறித் திருவண்ணமலைக்குச் சென்றோம். அங்கிருந்து புகைவண்டித் தொடரில் ஏறித் திருநெல்வேலி வந்து, மீண்டும் மோட்டார் வாகனமேறி, 20-8-1954 மாலை எங்களூரை அடைந்தோம்.

உன் அன்புள்ள நண்பன்,

**கருணாகரன்.**

**சொற்பொருள் விளக்கம்:**

கட்டமுது - வழியுணவிற்காகக் கட்டப்படும் சோறு, செஞ்சி - ராஜாதேசிங்கு என்னும் மன்னன் ஆண்ட கோட்டை, அரண் - கோட்டை, இணைத்து - சேர்த்து, அகழி - பகைவர் மதிலைக் கடவாதவாறு மதிலை அடுத்துத் தோண்டப்படும் ஆழமான நீர்நிலை, சுனை - நீர் ஊற்று, மீண்டும் - திரும்பவும்.

**பயிற்சி:**

1. சின்னம், தூர்ந்து கிடத்தல், இலாயம், அறிவாற்றல், நீர்ச்சுனை—இவற்றை வாக்கியத்தில் அமைத்துக் காட்டு.

2. நன்னிலை, பேராச்சரியம், நற்பயன், பிறிதொன்று—இவற்றைப் பிரித்தெழுது.

**வினாக்கள்:**

1. செஞ்சிக்கோட்டை எந்தெந்த மலைகளைச் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது?

2. இராசகிரியின் அடிவாரத்தில் காணப்படுவன யாவை?

3. நாம் இராசகிரியின் உச்சியில் சென்றால், எவற்றைக் காணலாம்?

4. கிருஷ்ணகிரியிற் காணப்படும் சிறந்த கட்டடம் யாது?

5. குறிப்பு எழுது:—மரப்பாலம், எண்ணெய்க்கிணறு, சபா மண்டபம்.

6. செஞ்சி நமக்கு எதனை அறிவிக்கின்றது?

**கட்டுரையாக்கப் பயிற்சி:**

'செஞ்சிக்கோட்டையின் அமைப்பு', 'பண்டை மன்னரின் அரண்'—என்பவற்றைப் பற்றிக் கட்டுரை எழுது.

**இலக்கணம்:**

ஆ, மா, கோ—இவை பசு, மிருகம், அரசன் என்னும் பொருள்களைக் குறிக்கும். இவை ஓரெழுத்துச் சொற்கள்.

ஆல், பால், மான், கோல்—இவை இரண்டு எழுத்தாலான சொற்கள்.

இவ்வாறு, எழுத்துத் தனித்தும், இரண்டு முதலாகத் தொடர்ந்தும் ஒரு பொருளைத் தெரிவிப்பது சொல் எனப்படும்.

**மலை, மனிதன், வாள்**—இவை பொருள்களுக்குப் பெயராய் வரும் சொற்களாதலின், **பெயர்ச்சொற்கள்.**

**நிற்கின்றது, ஓடுகின்றான், வெட்டினான்**–இவை தொழிலை அல்லது வினையைக் குறித்து வரும் சொற்களாதலின், **வினைச் சொற்கள்.**

**மலையில்,** மனிதன் **போல—இல், போல** என்பவை தனித்து வருவன அல்ல; பெயர்ச்சொல், வினைச்சொற்களை அடுத்து வரும் சொற்களாதலின், **இடைச்சொற்கள்.**

**நனி,** பேதை, **சால**த்தின்றான்—**மிகுதி** என்னும் பொருளில் வரும் **நனி, சால** என்னும் சொற்கள், பெயர் வினைகளின் குணத்தை உணர்த்தி வரும் சொற்களாதலின், **உரிச்சொற்கள்.**

# 9. செருக்கினால் சிறப்பிழந்த மன்னன்

1. பண்டைக்காலத்து விளங்கிய பேரரசுகள் பல. அவை அவற்றை ஆண்ட மன்னரின் போர்த்திறனைச் சார்வாகக் கொண்டு, காலந்தோறும் எழுச்சியுற்றும் வீழ்ச்சியுற்றும் விளங்கின. பாபிலோனிய, பாரசீக, கிரேக்க, உரோமைப் பேரரசுகள் உலகில் பல்வேறு காலங்களில் உலக முழுமையுமுள்ள நாடுகளின்மீது ஆதிக்கம் செலுத்தியவையாகும். படை வலி கொண்டு பிற நாடுகளை வென்று, அவ்வந்நாட்டு அரசர்களையும் குடிகளையும் அடிமைகளாக்கி, அல்லற்குட்படுத்தி,



அவர்கள் அரிதிற்சேர்த்த மணி, பொன், பொருள்கள் யாவற்றையும் கொள்ளை கொண்டு, தங்கள் செல்வத்தைப் பெருக்கிச் செருக்குடன் ஆள்வதே அத்தேய மன்னர்களின் இயல்பாய் அமைந்திருந்தது.


2. வன்மை மிக்க அவ்வரசர்களுள் முதன்மையானவனுய் நூற்றிருபது நாடுகளைத் தன்கீழ் அடக்கியாண்டவன், புகழ் பெற்ற பாபிலோனியப் பேரரசன் **நேபுகாத்து நேச்சார்** என்பவன். அவன் தன் வெற்றிக்கு அறிகுறியாக எழிலுற அமைத்த நகரமே பண்டை நாகரிகமிக்க **பாபிலோன் நகரம்.** அவன் அந்நகரை அரண் செய்ய, **யூப்பிரட்டிஸ்** யாற்றைச் சார்ந்த வானளாவிய மதிலை எடுப்பித்து, அலங்கங்கள் பல அமைத்து, பகைவர் உட்புகா வண்ணம் காவலை அமைத்தான்; பேரரசனுகிய தான் வாழ, ஈடும் எடுப்புமில்லாத எழில் மிக்க அரண்மனை ஒன்றைக் கண் கவரும் பொருள்களுடன் 'காட்சிச்சாலையோ!' எனக் காண்பவர் ஐயுறுமாறு ஆக்கினன்; உலகப் புதுமைகளுள் ஒன்ருய் விளங்கிய தொங்குதோட்டங்களைத் தன் இல்லாள் **அமிதிஸ்** என்பாளின் விருப்பிற்கிணங்கத் தோற்றுவித்தனன். மலை நாட்டரசன் மகளான அவ்வரசி, மலைக்காட்சியைத் தன் நகரிலும் கண்டு இன்புறும்படி, பெருஞ்செலவில், யூப்பிரட்டிஸ் யாற்றினின்றும் படிப்படியாய் உயர்ந்து விளங்கிய மாடிகளின்மீது இயற்கையழகு செறியப் பசிய செடி, கொடி, மரங்கள் வானளாவித் தோன்றும் முறையில் அமைத்துப் பெருமிதங் கொண்டான். அவன் ஆணைக்கிணங்க அழகிய கட்டடங்களும், இளமரச் சோலைகளும், வாவிகளும் நகரில் உண்டாக்கப்பட்டன. மன்னன் அடைந்த மகிழ்ச்சி எல்லை கடந்தது. அதனைத் தொடர்ந்து, செருக்கும் அவனை ஆட்கொண்டது.

3. செருக்குற்ற மன்னன் ஒரு நாள் அயர்ந்து துயின்ருன்; ஆயினும், இன்ப உறக்கத்துக்கு

இடையூருக ஒரு கனவு கண்டான். உயர்ந்தோங்கிப் பூமியின் எல்லையை எட்டிய பரந்த கிளைகளும், இனிய கனிகளும், பசிய இலைகளுமுடைய மரம் ஒன்று காணப்பட்டது. அதன் கிளைகளில் பல வகைப் பறவைகள் அமர்ந்திருந்தன; அதன் நிழலில் விலங்குகள் பல காணப்பட்டன. "உயிர்களுக்கு உதவும் இம்மரத்தின் கிளைகளை வெட்டுங்கள்; அசையாத உறுதியுடைய இதனடி மரத்தை அழியுங்கள்; ஆயினும், இதன் வேர் நிற்பதாக. அரசன் விலங்குடன் விலங்காகப் பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து, ஏழு காலம் வாழ்வானுக; 'இம்மண்ணில் உள்ளோர் உலகாளும் உயர்ந்தோராவதும், மதிப்பிழந்து மிடியால் தாழ்ந்தோராவதும் இறைவன் திருவுளப்படியே நடப்பனவாம்,' என்னும் அறிவு ஏற்படுமளவும் அந்நிலை உடையவனுகுக!" என்ற தெய்வக் காவலன் ஆணை ஒலி கேட்டது.

4. அரசன் துணுக்குற்று விழித்தான்; கனவின் பொருளறிய விழைந்தான்; கனு நூல் வல்லாரை அழைத்தான்; தன் கனவைக்கூறி, அதன் பொருளை உரைக்க அவர்க்கு ஆணையிட்டான். கனு நூல் வல்லார் மருண்டனர். அரசன் வெகுண்டான். அச்சமயம் பேரரசனுல் யூதநாட்டினின்றும் அடிமையாகக் கொணரப்பட்ட யூதவகுப்பினனுன **தானியேல்** முன் வந்து வணங்கி, "அரசரே, இறைவன் அருளால், யான் இக்கனவின் பொருளைத் தெரிவிப்பேன்," என்முன். அரசன், "விரைவிற்கூறுக!" என்றனன். தானியேல், "அரசரே, நீங்கள் கனவிற்கண்டவை உங்கள் பகைவரிடத்து நடைபெறின் நலமாகும்;

ஆயினும், யான் தெளிந்தபடியே கூற வேண்டியவனுகின்றேன். நீங்கள் கண்ட மரம் உங்களேயே குறிக்கும். பறவைகளேயும் விலங்குகளேயும் போன்று பல நாட்டு மக்களும் உங்கள் ஆதரவில் வாழ்ந்து வருகின்ருர்கள். உங்கள் வன்மையும், செல்வப் பெருக்கும், நாட்டாட்சியும் உங்களே விட்டு நீங்கும். கிளேகளும் அடி மரமுமாகிய நீங்கள் வலியிழந்து, விலங்கின் வாழ்க்கையை மேற்கொள்வீர்கள். வேர் நிற்றல் போன்று, உங்கள் இறுமாப்பு நீங்கி, 'இறைவனருளால் யாவும் நடைபெறுகின்றன,' என்பதை உணர்ந்து, நீங்கள் வணக்கம் கொள்ளும்போது மீண்டும் உங்கள் பழைய பதவிக்கு உயர்த்தப்படுவீர்கள்.



ஆதலின், பேரரசராகிய நீங்கள் செருக்கு நீங்கி, இறைவனே வணங்கி வாழ்வீர்களாயின், இவை உங்களுக்கு நேரா," எனக் கூறினன்.

5. இதனேக் கேட்ட அரசனும் பிறரும் ஆச்-

சரியமுற்றனர். ஆயினும், அரசன் தானியேலின் அறிவுரைப்படி ஒழுகாமல், செருக்கு மிக்கவனுய்த் தன் அரண்மனையின் மேல் மாடியில் உலவிக்கொண்டே, "ஆ! என் வெற்றியின் சிறப்புத்தான் என்னே! இவ்வழகிய நகரம் என் வெற்றியின் சின்னமாக யான் நிருமித்ததன்ருே! எனக்கு நிகராவார் யார்?" எனக் கூறினன்.

6. அச்சமயம், "நேபுகாத்து நேச்சாரே, உன் சிறப்பு அழிந்தது! நீ வன்மையற்றவன்; உயர்ந்தோர் தாழ்வர்; தாழ்ந்தோர் உயர்வர்; யாவும் இறைவன் செயல். இதனை நீ உணருமளவும் உன் வாழ்க்கை விலங்கின் வாழ்க்கையேயாகும்," என அசரீரி வாக்கு எழுந்தது. பேரரசன் தன் பதவியிழந்து, அறிவை இழந்து, விலங்கின் தன்மை பெற்று, வனத்தில் சென்று வாழ்ந்தான்; பசுப்போலப் புல்லைத் தின்று தண்ணீரருந்தி, பனியில் நனைந்து, வெயிலில் அலைந்தான். அவன் தன்னைத் தாழ்த்தி, இறைவனை எண்ணி இறைஞ்சிய நாள், அவன் அமைச்சரும் தானைத்தலைவரும் அவனை அடைந்தனர். அவன் மீண்டும் அரச பதவி பெற்ருன்.

7. "இறைவன் ஆணையால் உலகு இயங்குகின்றது. அவனன்றி ஓரணுவும் அசையாது. இறைவன் திருச்சித்தத்திற்கேற்பவே யாவும் நடைபெறும். இறைவன் வலியவனைத் தாழ்த்தி மெலியவனை உயர்த்துவான். உலக ஆட்சியும் அவன் உள்ளப்படியே நடைபெறும். அவனையே இறைஞ்சி, இறுமாப்பொழிந்து வாழ்தல் வேண்டும்," என அவ்வரசன் தன் ஆணைப் பத்திரத்தில் எழுதி யாவருக்கும் அறிவித்தனன்.

**சொற்பொருள் விளக்கம் :**

அரண் - காவல், ஈடும் எடுப்பும் - ஒப்பும் உயர்வும், ஐயுறு தல் - சந்தேகித்தல், செறிய - நிறைந்து விளங்க, பசிய-பசுமை யான, ஆணை - கட்டளை, செருக்கு - கர்வம், பூமியின் எல்லையை எட்டிய - பூமி முழுவதும் பரவிய, மிடி - வறுமை, துணுக் குற்ருன் - திடுக்கிட்டான், மருண்டனர் - மயங்கினர், வெகுண் டான் - கோபித்தான், நாட்டாட்சி - நாட்டையாளும் அரசாட்சி, தொலையா - அழியாத, நிருமித்தது - அமைத்தது, தானை - சேனை, அவன் - கடவுள், இறுமாப்பு - கர்வம்.

**பயிற்சி :**

1. ஆதிக்கம், அல்லல், அறிகுறி, வானளாவிய, தெளிந்த படி—இச்சொற்களை வாக்கியங்களில் அமைத்தெழுது.

2. **இரு பொருள் எழுது :** ஈடு, இல்லாள், கிளை, வலி.

**வினக்கள் :**

1. பண்டைக் காலத்து விளங்கிய உலகப் பேரரசுகள் யாவை ?
2. பாபிலோன் நகர் யாரால் அழகுற அமைக்கப்பட்டது ?
3. 'தொங்குதோட்டம்' என்பது யாது ?
4. செருக்குற்ற மன்னன் யாவன் ?
5. அவன் கண்ட கனவு யாது ?
6. அக்கனவின் பொருளைத் தெரிவித்தவன் யாவன் ?
7. அரசனுக்குற்ற தாழ்வு யாது ?
8. அவன் அறிந்த உண்மை என்ன ?
9. இதினின்றும் நாம் அறிய வேண்டுவது யாது ?

**கட்டுரையாக்கப் பயிற்சி :**

'நேபுகாத்து நேச்சாரும் தொங்குதோட்டமும்', 'அழிவுக்கு முன் அகந்தை'—இவற்றைப்பற்றி இருபது வரிகள் எழுது.

### இலக்கணம் :

மணி, பொன்—இவை பொருட்பெயர்.

நாடு, மலை—இவை இடப்பெயர்.

சமயம், நாள்—இவை காலப்பெயர்.

இலை, கிளை—இவை சினைப்பெயர்.


செருக்கு, பசுமை—இவை குணப் பெயர்.

வாழ்க்கை, இறக்கம்—இவை தொழிற்பெயர்.

பெயர்ச்சொல், பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என அறுவகைப்படும்.

# 10. காகிதம் செய்தல்

1. மக்கள் வாழ்க்கையிற் பயன்படும் பொருள்கள் பல. அவற்றுள் காகிதமும் ஒன்று. மாணவர் படிக்கும் புத்தகங்களும், குறிப்புச்சுவடிகளும் காகிதத்தாலானவைகளே. முற்காலத்தில் இப்படிப்பட்ட காகிதம் உபயோகத்தில் இருந்ததில்லை.



2. முற்காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள், பனையோலைகளையே எழுதுவதற்குப் பயன்படுத்திவந்தார்கள். பனங்குருத்தோலைகளைக் கொண்டு வந்து, கத்தியால் சீவி, ஓரளவாக நறுக்கிக்கொண்டு, எழுத்தாணியினால் எழுதுவார்கள். நம் மூதாதையர்கள் இவ்விதமான பனையேடுகளில் எழுதியே படித்து வந்தார்கள். இவ்வாறு எழுதப்படும் ஏடுகள் எளிதிற் கிடைக்காததால், கல்வி பரவுவதற்கும், யாவரும் எளிதில் படிப்பதற்கும் முடியவில்லை. இந்த ஏட்டுச் சுவடிகளை இன்னும் ஏராளமாக அரசாங்கப் புத்தக நிலையத்திலும், தஞ்சைமாநகரில் உள்ள அரண்மனையிலிருக்கும் **சரஸ்வதி மகால்** என்னும் இடத்திலும் காணலாம். இக்காலத்திலும் சில பெரிய கடைகளில் எழுதப்படும் கணக்கெல்லாம் இப்படிப்பட்ட ஏடுகளிலேயே எழுதப்பட்டு வருகின்றன.

3. இக்காலத்தில் காகிதத்தின் உதவியாலும் அச்சியந்திரத்தின் உதவியாலும் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் நாளுக்கு நாள் தோன்றி வருகின்றன ; கல்வி பரவுவதும் எளிதாயிற்று. ஆகையால், காகிதம் செய்யும் முறையை நாம் சிறிது ஆராய்வோம் :

4. காகிதத்தை முதல் முதல் செய்யத் தொடங்கியவர்கள் சீனர்களே. அவர்களிடமிருந்துதான் காகிதம் செய்யும் முறையை ஐரோப்பியர் கற்றுக்கொண்டனர். பின்னர்க் காகிதம் செய்யும் தொழில் சிறிது சிறிதாக உலகமெங்கும் பரவிற்று. ஹாலந்து தேசத்தவர் காகிதம் செய்யும் தொழிலில் பல புதிய முறைகளைக் கையாண்டனர்.

5. முதலில் இத்தொழிலைச் சிறு இயந்திரங்களைக்கொண்டே செய்தார்கள். மக்கள் கட்டிக் கழித்த கந்தைத் துணிகளையும், சணலையும், நாரையும் சேர்த்து, அவற்றை இயந்திரங்களின் உதவியால் சிறு சிறு துண்டுகளாக வெட்டுவார்கள்; அவற்றை ஒரு பெரிய கொப்பரையிலிட்டுத் தண்ணீர் ஊற்றுவார்கள் ; அதைச் சுத்தி செய்வதற்குச் சோடா உப்பையும் சுண்ணங்களையும் அதில் இட்டு நன்ருக வேக வைப்பார்கள். அவைகளிலுள்ள அழுக்குக்களும் சாயமும் நுரையாகப் பொங்கி மேலே வரும். அந்நுரையை நீக்கிவிட்டால், கொப்பரையிலுள்ளவை சுத்தமாகி வெண்ணிறமாயிருக்கும். அதைப் பன்முறையும் இப்படியே சுத்தி செய்வார்கள். அதைப் பெட்டி போன்றுள்ள ஓர் இயந்திரத்தில் கொட்டி வைப்பார்கள். அந்த இயந்திரத்தின் அடிப்பாகத்தில் பல உருளைகள் இருக்கும். அந்த உருளைகளைச்

சுற்றிலும் பல சிறிய கத்திகள் வரிசையாய் இருக்கும். அந்த இயந்திரம் இயங்குவதால் உருளைகள் சுழலும். அந்தக் கந்தைத் தொகுதிகளெல்லாம் அரைபட்டுக் கூழாகிவிடும். அப்பால் அந்தக் கூழை அடியிலுள்ள சிறிய துவாரங்களின் வழியாக வேறொரு தொட்டியிலிட்டு வடிகட்டுவார்கள். வடிகட்டிய கூழ் மிக மிருதுவாகவும் சற்று இறுகியுமிருக்கும். அதைக் கம்பிகளாலாகிய சல்லடைத் தகட்டிலிட்டு அமுத்தி எடுப்பார்கள். அப்பொழுது அக்கூழ் பசையைப்போல இருக்கும். அப்பசையிலுள்ள நீர் வடிந்த பிறகு அதை ஒரு கம்பளியில் கவிழ்த்து மற்றொரு கம்பளித்துண்டால் ஒற்றுவார்கள். சிறிது நேரத்தில் அது உலர்ந்து, மை ஒற்றுத் தாள் போல இருக்கும். அதை ஒரு வகை மருந்து கலந்த நீரில் நனைத்து, வழுவழுப்பான பல உருளைகளினிடையே கொடுத்தெடுப்பார்கள். அப்பொழுதுதான் அது நாம் எழுதுகின்ற தாளாகும். அக்காகிதத்தைச் செய்யும் வியாபாரிகள் தங்கள் பெயரை நீரெழுத்துக்களின் மூலமாக ஒவ்வொரு தாளிலும் அமைப்பார்கள். தாள்களைக் கையில் எடுத்துப்பார்த்தால், அந்த எழுத்துக்கள் நன்றாய்த் தெரியும்.

6. இவ்வாறு செய்யப்படும் காகிதம் மிகப் பெரியதாயிருக்கும். அதனை இயந்திரங்களில் கொடுத்து வேண்டும் அளவிற்கு வெட்டி, குயராகவும், ரீமாகவும், பேலாகவும் எண்ணி மடித்துக் கட்டி, வியாபாரத்துக்கு அனுப்புவார்கள்.

7. அட்டைகளையும், வைக்கோல் புற்களையும், மரத்தூள்களையும் சேர்த்துச் செய்யப்படும் காகிதமும் உண்டு. அது அவ்வளவு நன்றாயிராது. காகி-

தக் கூழோடு பல நிறச் சாயங்களையும் சேர்த்துப் பல நிறமான காகிதங்கள் செய்வார்கள்.

8. அச்சியந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர்ப் பத்திரிகைகளும், புத்தகங்களும், விளம்பரங்களும் அச்சிடப்படுகின்றன. காகிதமும் பல வகையிலும் உபயோகப்படுகிறது. நம் நாட்டவர் ஏட்டையும் எழுத்தாணியையும் மறந்தனர்.

9. ஜப்பானியர் காகிதத்தைப் பல வகையிலும் பயன்படுத்திக்கொள்கின்றனர். அவர்கள் அட்டைகளைக்கொண்டே வீடுகளை அமைத்துக்கொள்வார்கள் ; வெயிலாலும், மழையாலும் அழியாதபடி அட்டைகளின்மேல் ஒரு வகைக் கலவையைப்பூசி, அவைகளைச் சுவர்களாகவும் கூரைகளாகவும் உபயோகப்படுத்துவார்கள் ; காகிதத்தினால் குடைகளும் செய்துகொள்வார்கள் ; சித்திரப் பூக்கள் முதலிய விளையாட்டுப் பொருள்களும் செய்வார்கள்.

10. இக்காலத்தில் காகிதம் செய்யப்படும் தொழிற்சாலைகள் பல இடங்களிலும் ஏற்பட்டு, நாள்தோறும் மிகுதியாகக் காகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது. உலகத்தில் செய்யப்படும் காகிதத்தில் முக்காற்பங்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள இயந்திரத் தொழிற்சாலைகளில் செய்யப்படுவதேயாகும். நமது தேசத்தில் **கல்கத்தா, பம்பாய்** முதலிய நகரங்களிலும் காகிதத் தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ளன. காகிதம் செய்யும் தொழிலைக் குடிசைத் தொழிலாக மேற்கொண்டு நாம் நடத்தி வந்தால், காகிதத்திற்காக அயல் நாடுகளை எதிர் நோக்கி நிற்கும் நிலை ஏற்படாது. திருவிதாங்கூர் நாட்டைச்சார்ந்த **புனலூரில்**

மட்டமான காகிதம் செய்யப்படுகின்றது. அந்நாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய அது போதுமானதாகும்.

**சொற்பொருள் விளக்கம் :**

கையாண்டார்கள் - பயன்படுத்தினுர்கள், சல்லடை - சிறு சிறு துவாரமுள்ள தகடு, மட்டமான - தன்மையிற்குறைந்த, கூழ் - குழம்பு. குயர், ரீம், பேல் - காகித அளவுகள்.

**பயிற்சி :**

1. எளிது, சுத்தம், இறுகி—இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. **பிரித்தெழுது :**—எழுத்தாணி, பனையோலை, மற்ருெரு.

**விஞக்கள் :**

1. தமிழ் நாட்டில் முற்காலத்து மக்கள் எழுதுவதற்கு உபயோகப்படுத்தியது யாது?

2. ஏட்டுச் சுவடிகளை இன்று நாம் எங்குக் காணலாம்?

3. முதன்முதல் காகிதம் செய்தவர் யாவர்?

4. ஜப்பானியர் காகிதத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றனர்?

5. காகிதத் தொழிற்சாலைகள் உள்ள நகரங்கள் எவை?

**கட்டுரையாக்கப் பயிற்சி :**


'காகிதம் செய்யும் முறை', 'காகிதமும் அதன் பயனும்' என்பன பற்றிக் கட்டுரை எழுது.

**இலக்கணம் :**

1. **உருளை, துணி**—இவை, உருள்கின்ற காரணத்திஞல் 'உருளை' என்றும், தறியினின்றும் துணிக்கப்படும் காரணத்திஞல் 'துணி' என்றும் பெயர் பெற்றன. இவ்வாறு, காரணங் கருதி வழங்கப்பட்ட பெயர் **காரணப்பெயர்** எனப்படும்.

**கல், மண்**—இவை காரணமின்றி, பொருள்களைப் பிரித்து அறிவதற்காக இடப்பட்ட பெயர்கள். இவ்வாறு காரணமின்றி இடப்பட்ட பெயர் **இடுகுறிப்பெயர்** எனப்படும்.

பறவை, முள்ளி, கூழ், பால்—இவை என்ன பெயர்கள்?



## 11. எல்லோராக் குகைக் கோவில்கள்

1. **அஜந்தாக் குகைகள்** நமது நாட்டின் ஓவியக் கலைக்கும், சிற்பக்கலைத்திறனுக்கும் எடுத்துக்காட்டாய் உள்ளன. அஜந்தாக்குகை காணப்படும் ஐதராபாது நாட்டின் மற்றொரு பாகத்தில் சிற்பக்கலையின் சிகரமெனக் கூறத்தக்க **எல்லோராக் குகைகள்** காணப்படுகின்றன. அவற்றைக் **குகைக்கோவில்கள்** என வழங்குவர். அவை மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுகளை உடையவை. அவற்றை அமைத்த சிற்பியே, அவற்றை முடித்த பின்பு, 'யானா இவற்றை அமைத்தேன்!' என்று கூறி ஆச்சரியப்பட்டானெனக் கூறுவர். அப்படியானால், அவற்றைப் பிறர் கண்டு வியக்காமல் இருக்க முடியுமா?

2. வியக்கத்தக்க அக்குகைக் கோவில்களைக் கட்டியவர் **முதலாம் கிருஷ்ணர்** என்ற இராஷ்டிர-கூட அரசராவர். **மானிய கடகம்** என்ற நகர் அவரது தலை நகரம். அந்நகரம் **மால்கோட்டு** எனவும் வழங்கப்படும். அது ஐதராபாதுக்கு அருகில் உள்ளது. எல்லோராக் குகைக்கோவில்-கள் **தௌலதாபாது** நகரின் அருகே உள்ளன. அவ்விடம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. பத்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த தரைநூல் விற்பன்னரான **மாசூதி** என்ற அராபியர், அதனை யாத்திரை செல்லும் புண்ணிய இடம் எனக் குறித்துள்ளார்.

3. அஜந்தாக் குகைகள் செங்குத்தான பாறையில் அமைக்கப்பட்டுள்ளன. எல்லோராக் குகைக்கோவில்கள் மலைச்சரிவுகளில் வெட்டப்பட்-டிருக்கின்றன. அவை சுமார் ஒன்றேகால் மைல் தூரத்திற்கு வியாபித்துள்ளன. அவை அமைக்-கப்பட்ட காலத்திற்கு ஏற்ப, ஒழுங்குபடுத்தப்-பட்டுள்ளன. அவற்றைப் புத்த, பிராமண, சமண-காலத்தவை என மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவற்றுள் நடு நாயகமாய்ச் சிறந்த வேலைப்பாடு-களுடன் காணப்படுவது **கைலாசநாதர் கோவி-லேயாகும்**. அதனைப் பார்ப்பவர் குகைக்கோவி-லெனக் கூறமாட்டார்; சமநிலத்தில் கட்டப்பட்ட கோவிலெனவே கருதுவர். அதனைப் பார்வையிட்ட **பெர்கூஸன்** என்னும் மேனுட்டறிஞர், அதனை வியக்கத்தக்க இந்திய சிற்பக்கலையின் சிகரம் எனவே கூறியுள்ளார்.

4. அக்கோவிலின் பிராகாரம் இருநூற்று எழுபத்தாறு அடி நீளமும், நூற்றைம்பத்து நான்கு அடி அகலமும் கொண்டது. அதற்கும்

கோவிலுக்கும் இணைப்பேயில்லை. அதன் மேற்-பாகத்திலுள்ள தாழ்வாரம் போன்ற அறைகளையே பாறையாலான பாலம் ஒன்று கோவிலுடன் இணைத்திருந்ததென்பது தெரிகிறது. மிகப்பெரிய யானைகளும் நந்தியிருக்கும் அறைக்கு வெளிப் புறத்தில் காணப்படுகின்றன. அதற்கப்பால் ஒரே பாறையில் அமைக்கப்பட்ட கோவில் தோன்று-கிறது. அது சுமார் தொண்ணூறு அடி உயர-மானது. தாழ்வாரமும், உள்ளறையும், மூலஸ்தான-மும் மிகவும் அற்புத வேலைப்பாடுகள் அமைந்-துள்ளன.

5. அக்கோவில் தூரத்திலிருந்து பார்ப்ப-வருக்குக் கல்லாலும், பிற உலோகங்களாலும் அடுக்கடுக்காய்க் கட்டப்பட்டுள்ளதாகவே தோன்-றும். அண்மையிற்சென்று பார்ப்பவருக்குத்தான் ஒரே பாறையாலமைந்தது என்னும் உண்மை புலனாகும். கோவிலில் இராமாயண மகாபாரதக்-கதை நிகழ்ச்சிகள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. எல்லோராக் குகைக்கோவில்கள் யாவும் நுட்பமான வேலைப்பாடமைந்தனவேயாகும். சில, வர்ணம் தீட்டப்பட்டுள்ளனவாகக் காணப்படினும், பெரும்-பாலும் அவை அழிந்து போயின.

6. நமது இந்திய நாட்டில் எங்குச் சென்றா-லும் சிற்பக் கலையின் சிறப்பைக் காணலாம். நம் முன்னோர்கள் பொறுமையுடன் வருடக் கணக்காக முயன்று நமக்கு இத்தகைய கலைச் செல்வங்களை ஆக்கித் தந்துள்ளார்கள். அண்மையிலேதான் இந்திய மக்கள் புராதன சிற்பக் கலைகளை வளர்க்க வேண்டுமென்ற ஆவல் கொண்டுள்ளார்கள். இக்-கலைகள் வளர நம் முன்னோரைப்போன்று நாமும்

அற்புதக் கலைச்செல்வங்களை நாட்டிற்கு அளிப்போமாக.

**சொற்பொருள் விளக்கம் :**

எடுத்துக்காட்டு - உதாரணம், வியத்தல் - ஆச்சரியப் படுதல், விற்பன்னர் - அறிவிற்சிறந்தவர், நடுநாயகம் - சிறப்பானது, பிராகாரம் - கோவிலின் சுற்றுப்பக்கம், இணைப்பு - தொடர்பு, ஸ்தம்பங்கள் - தூண்கள்.

**பயிற்சி :**

1. **இரு பொருள் கூறு :**—கலை, தொலை இணை, புலன்.
2. **பிரித்தெழுது :**—நூற்றாண்டு, எழுபத்தாறு.
3. மூன்றும் பத்தியிலுள்ள தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக மாற்று.

**வினாக்கள் :**

1. எல்லோராக் குகைக்கோவில்கள் எங்குள்ளன ?
2. அவற்றை ஆக்கிய சிற்பி யாது கூறினன் ?
3. அக்குகைகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன ?
4. அவற்றுள் மிக்க சிறப்புடையது எது ?
5. எல்லோராக் குகைக்கோவிலின் அமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது ?

**கட்டுரையாக்கப் பயிற்சி :**

**'எல்லோராக் குகைகள்'** என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.



## 12. கா. நமச்சிவாய முதலியார்

1. தமிழுக்காக உழைத்த பெரியார்களுள் திருவாளர் **கா. நமச்சிவாய முதலியாரவர்கள்** ஒருவர். அவர் வடவார்க்காட்டு ஜில்லாவில் **காவேரிப்பாக்கம்** கிராமத்தில் **இராமசாமி முதலியாருக்கும் அகிலாண்ட வல்லியம்மையாருக்கும்** புதல்வராய், 1876-ஆம் ஆண்டு பெப்புருவரித் திங்கள், 20-ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிறந்தார். அவர் தமது ஆரம்பக் கல்வியை அவ்வூரில் தம்

தந்தையார் நடத்திக்கொண்டிருந்த பள்ளிக்கூடத்தில் கற்று முடித்தார்.

2. பின்னர் முதலியார் சென்னையை அடைந்து, ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராய் அமர்ந்தார். அக்காலத்தில் தமிழில் பெரும்புலமை பெற வேண்டுமென்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று. அதனால், அவர் **திருமயிலை மகாவித்துவான் சண்முகம் பிள்ளையவர்களிடம்** தமிழ் நூல்கள் பல கற்றார்; தம் தமிழாசிரியர்பால் மிக்க அன்புடன் ஒழுகினார். ஆசிரியரும் தம் மாணவரைத் தம் புதல்வராகவே பாவித்து வந்தார். தம் ஆசிரியர் இறந்த பின் அவர் மனைவியாருக்கு முதலியார் பொருளுதவி செய்து அவ்வம்மையாரைக் காப்பாற்றி வந்தனர்.

3. முதலியார் தமிழ்ப் புலமை பெற்றுச் சென்னைத் **திருப்பவுல் உயர்நிலைப் பள்ளியில்** தமிழாசிரியராய் அமர்ந்தனர். அவர் மாணவருக்குத் தமிழ் நூல்களைத் திறம்படப் போதித்து வந்தனராதலால், மாணவர் அவர்மீது பேரன்பு கொண்டனர்.

4. பின்பு முதலியார் 1914-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சென்னை **மேரி ராணியார் கல்லூரியில்** தமிழ்ப் பேராசிரியராய் நியமிக்கப்பட்டு, அக்கல்லூரியின் முன்னேற்றம் கருதி உழைத்து வந்தார்; 1917-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் தமிழ்த் தேர்வுகளுக்குத் தலைமைப் பரிசோதகராய் நியமிக்கப்பட்டார்; 1920-ஆம் ஆண்டு முதல் 1934-ஆம் ஆண்டு வரையில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடக் குழுவின் தலைவராயிருந்து தமிழ்ப்பணியாற்றினார்; சென்னை

**மாகாணக் கல்லூரி**யிற் சில ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராயிருந்து ஓய்வு பெற்ருர்.

5. முதலியார் **நல்லாசிரியன்** என்னும் செய்தித் தாளைத் திங்களுக்கு ஒரு முறை வெளியிட்டு வந்தார்; மாணவர்களின் தகுதிக்கேற்பப் பாட புத்தகங்களையும் எழுதி வெளியிட்டு வந்தார். உலகியலறிவும், கல்வியறிவும் வாய்ந்த முதலியாரெழுதிய புத்தகங்கள் யாவராலும் பாராட்டப்பட்டன. **பிருதிவி ராஜன், கீசகன்** என்னும் இரண்டு நாடக நூல்களும் அவரால் எழுதப்பட்டன. பல தனிப் பாடல்களையும் செய்யுட்கதைகளையும் அவர் இயற்றியுள்ளார். முதலியார் தமிழ் நடை, மிகுந்த கம்பீரமும் தெளிவும் வாய்ந்தது; பிற எழுத்தாளருக்கு முன் மாதிரியாய்த் திகழ்வது.

6. முதலியார் தமிழன்பு மிக்கவர்; தமிழாசிரியர்களைக் காணின், அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தவர்; அவர்களுடைய குறைகளைத் தமக்குற்ற குறைகளாகவே கொண்டு நீக்க முயன்றவர்; யாவரிடத்தும் தாழ்மையாய் ஒழுகியவர். அவரால் நன்மையடைந்தவர் பலர். பிறரிடம் காணப்படும் நற்குணங்களைப் பாராட்டி மகிழும் இயல்பு முதலியாரிடம் அமைந்திருந்தது.

7. 'முயற்சி திருவினையாக்கும்,' என்பதற்கு இணங்க, இடைவிடாது முயற்சி செய்து மேன்மை அடைந்தவர்களுள் முதலியார் ஒருவர். அவர் தாம் ஈட்டிய பொருளைத் தகுதியறிந்து வழங்குவதில் தலை சிறந்தவர். அப்பெரியாரின் உழைப்பும், தமிழன்பும் எடுத்துக்காட்டாகக் கூறத்தக்கன. இளமாணவர்களுக்கேற்ற தமிழ்ப் புத்தகங்கள்

இல்லை என்ற குறையை முதன்முதலில் நீக்கியவர் முதலியாரேயாவர்.

### சொற்பொருள் விளக்கம்:

புலமை - அறிவு, குழு - கூட்டம், மன்றம் - சபை, ஒழுகுதல் - நடத்தல், திருவினையாக்கும் - செல்வத்தைப் பெருக்கும், ஈட்டிய - சம்பாதித்த.

### பயிற்சி:

1. பேரன்பு, உலகியலறிவு, பணி, தகுதி—இவற்றை வாக்கியங்களிலமைத்து எழுது.

2. **பிரித்தெழுது**:—த மி ழா சி ரி ய ர், பொருளுதவி, பேரன்பு, உலகியலறிவு.

### வினாக்கள்:

1. நமச்சிவாய முதலியாரின் பெற்றோர் யாவர்?
2. முதலியாருக்குத் தமிழாசிரியர் யாவர்? அவர்மீது இருந்த அன்பை முதலியார் எவ்வாறு வெளிப்படுத்தினர்?
3. முதலியார் பணியாற்றிய கலைக் கழகங்கள் யாவை?
4. முதலியார் செய்த தமிழ்த்தொண்டு யாது?
5. முதலியாரின் குணச் சிறப்பு யாது?

### கட்டுரையாக்கப் பயிற்சி:

'தமிழ்ப்பெரியார்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

### இலக்கணம்:

முதலியார் தமிழாசிரியர்களைக் காணின், உபசரிப்பார். —இதிலுள்ள வினைச்சொற்களைக் கவனி.

'காணின்' என்னும் வினைச்சொல் பொருள் முடியாத சொல்; 'உபசரிப்பார்' என்பது, பொருள் முடிந்த சொல். முன்னையது எச்சச் சொல்; பின்னையது முற்றுச் சொல். வினைச்சொல்லைக்கொண்டு முடியும் எச்ச வினைச்சொல், **வினையெச்சம்** எனப்படும். பொருள் முடிந்த வினைச்சொல், **வினைமுற்று** எனப்படும்.

இப்பாடத்திலிருந்து ஐந்து வினை முற்றுக்களும் ஐந்து வினையெச்சங்களும் எடுத்தெழுது.

# 13. நூல் நிலையங்கள்

1. மக்கள் அறிவிற்சிறந்தோங்கக் கல்வி கற்றல் வேண்டும். கண்ணிலான் கவின் பெறு காட்சிகளைக் கண்டு மகிழான். கல்வியாகிய கண்ணின்றேல், மக்கள் பொருள் நயம் மிகுந்த நூல்களை வாசித்து அவற்றின் கவின் பொருந்திய நடையையும், கருத்தழகுகளையும், கற்பனை நயங்களையும் கண்டானந்தித்தல் இயலாது. ஆதலின், கல்வி என்னும் கருந்தனத்தை யாவருமடைந்து வாழ்க்கை நலங்களைத் துய்க்க, அறிஞர் பண்டை நாள் முதல் இன்று வரை பற்பல சாதனங்களைக் கையாண்டு கல்வியை மக்களிடையே பரப்பும் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

2. இக்காலை மேனுட்டினர் சிறப்பாகக் கையாளும் கல்விச் சாதனம், **நூல் நிலையமேயாகும்.** இச்சாதனத்தைக் கையாண்டே மேனுட்டினரான ஆங்கிலேயரும், அமெரிக்கரும், பிறரும், கல்விப் பெருக்கை அடைந்துள்ளனர். நாடெங்கும் கல்வியறிவைப் பரவச்செய்து, கைத்தொழில் விவசாயம் முதலியவற்றில் வல்லுநராய்த் திகழ்வதுடன், செல்வமும் மிகுந்து, நாகரிகமும் நிரம்பப் பெற்றுள்ளனர். இதனுல், நூல் நிலையம் மனிதனுக்கு உலக ஞானத்தையும், பொருள் தேடும் வழியினையும், ஒழுக்க நெறியினையும் அறிவுறுத்துமென்பது தெற்றென விளங்கும். இத்தகைய நூல் நிலையம் மிகுந்த நாடே சிறப்புறும்.

3. நமது தமிழ் நாட்டிலும் முற்காலத்தில் நூல் நிலையங்கள் மிக்கு விளங்கின. சங்க நூல்களிற்பல, தொகை நூல்களேயாகும். பல காலத்-

தும் பலவிடத்தும் பற்பல ஆசிரியர்களால் பாடப்பட்ட செய்யுட்களைத் தொகுத்தனவே **தொகை நூல்கள்** எனப்படும். ஆதலின், சங்கங்கள் என வழங்கப்பட்டன நூல் நிலையங்களாகவே இருந்தன என்பது அறியற்பாலது. கி. பி. 5-ஆம் நூற்றுண்டிலும் **வச்சிர நந்தி** என்பவன் ஒரு சங்கம் நிறுவினன் என்பது தெரிகின்றது. பண்டைக் கோயில்களும் மடங்களும் நூல் நிலையங்களாகவே விளங்கின. தஞ்சையிலுள்ள **சரசுவதி மகாலும்,** சிதம்பரக் கோவிலில் கண்டெடுத்த தேவாரப் பாடல்களும் இவற்றை வலியுறுத்தும். இவற்ருல் நம் முன்னேர் நூல் நிலையங்களின் பயனை அறிந்திருந்தனரென்பது தெற்றெனப் புலனுகும். அக்கால நூல் நிலையங்களில் நூல்கள் வாசிப்போருக்கு இரவலாகக் கொடுக்கப்படாமையாலும், நூல்களும் பெரும்பாலும் செய்யுள் வடிவினவாயிருந்தமையாலும் அக்கால நூல் நிலையங்களால் பொது மக்களுக்குப் பெரிதும் பயனேற்படவில்லை என்பது தெரியவருகிறது. அக்கால நூல் நிலையங்கள் தனிப்பட்டவர்களுக்கே உரிமையுடையனவாய் நூல்களைப் பழுதுபடாமற் பாதுகாத்தலையே பெருநோக்கமாகக் கொண்டு விளங்கின.

4. இக்காலத்தில் விளங்கும் நூல் நிலையங்கள் பொது மக்களுக்குப் பயன்படுதற்காக நிறுவப்பட்டுள்ளன. மேனுட்டார், நாட்டின் நகரங்களிலும், கிராமங்களிலும் நூல் நிலையங்களை அமைத்திருக்கின்றனர். புகை வண்டித் தொடர்களில் பிரயாணஞ் செய்பவர் படிப்பதற்கும் பத்திரிகைகளும் புத்தகங்களும் கொடுத்துதவ நூல் நிலையங்கள் உள்ளன. நமது நாட்டிலும் **சென்னை, மதுரை,**

**தஞ்சை, திருச்சி** முதலிய பெரிய நகரங்களிலும், சிற்சில கிராமங்களிலும் நூல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

5. கிராமந்தோறும் நூல் நிலையங்கள் அமைய வேண்டும். சாதாரண மக்களும் நூல் நிலையங்களில் அங்கத்தினராகச் சேர்ந்து, மாதந்தோறும் சிறு சிறு தொகையைச் சந்தாவாகச் செலுத்துவதுடன், யாவரும் தம்மிடமுள்ள நூல்களை நூல் நிலையங்களுக்கு இலவசமாக அளிக்கவும் வேண்டும். புலவர்களும் மற்றவர்களும் தங்களிடமுள்ள புத்தகங்களை நூல் நிலையங்களில் தங்கள் அந்திய காலத்தில் சேர்த்துவிடின், அவற்றால் நூல் நிலையங்கள் விரிவடைந்து, பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படும். புத்தகங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் சரியான கணக்கு வைத்திருக்கவேண்டும். இலவசமாகக் கிடைப்பனவற்றை நூல் நிலையத்திற் சேர்ப்பதுடன், வருடந்தோறும் குறிப்பிட்ட தொகைக்குப் புதிய நூல்களையும் வாங்கவேண்டும். பற்பல தொழிற்றுறை நூல்களும் நூல் நிலையங்களில் இருத்தல் வேண்டும். எளிய நடையிலுள்ள புத்தகங்கள் முதல், ஆராய்ச்சியாளர்க்கு வேண்டிய அரிய புத்தகங்கள் வரை, எல்லா விதமான புத்தகங்களும் அமைந்திருக்கும் நூல் நிலையமே சிறந்த நூல் நிலையமாகும். நூல்கள் வாசிப்பவர்களுக்கு எளிதில் கிடைக்கும்படியான நியமங்களே கையாளப்பட வேண்டும்.

6. இத்தகைய நூல் நிலையங்களால் ஏற்படும் பயன்கள் பல. நூல் நிலையங்களால் மாணவர்கள் தங்கள் புத்தக அறிவையும் உலக அறிவையும் விருத்தி செய்ய அனுகூலம் ஏற்படுகின்றது.

'ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும், காற்கூறல்லது பற்றலனுகும்,' எனப் **பவணந்தியார்** கூறியிருப்பதை நோக்க, மாணவர்கள் நூல்களைத் தாங்களே படிப்பதால் தங்கள் அறிவை வளர்த்தல் கூடுமென்பது தெரிய வரும். இதற்கு நூல் நிலேயமே தக்க சாதனமாகும். நூல்களை விலே கொடுத்து வாங்க முடியாத ஏழைகளுக்கு நூல் நிலேயங்கள் அறிவை வளர்க்கும் சாதனமாகின்றன. பல தொழிற்றுறை நூல்கள் அமைந்துள்ள நூல் நிலேயத்தில், பற்பல தொழிலாளரும் சென்று, தத்தம் தொழிலேப் பற்றிய நூல்களை வாசித்துத் தம் தொழிலே விருத்தி செய்யலாம். பற்பல நூல்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பதால், பொது அறிவு பெருகுவதுடன், தொழிற்றுறை அறிவும் பெருகிப் பொருளீட்டும் ஆற்றல் பெருகுகின்றது. அரசியல் உலகியல்களை அறியவும், பல நீதிகளை அறியவும், பிற நாட்டு வர்த்தமானங்களை அறியவும், காலத்தைப் பயன்படக் கழிக்கவும், இன்பமாகப் பொழுது போக்கவும் நூல் நிலேயம் உறுதுணேயாகின்றது. ஆதலின், நூல் நிலேயங்களைச் செல்வக் களஞ்சியங்களெனவே கூறலாம்.

7. அறிவைப் பெருக்கும் நூல் நிலேயம் இன்பப் பூங்காவாகும். நூல்களை எடுத்து வாசிக்குந்தோறும் இன்பம் பெருகுதல், புதிய மலர்களின் மணத்தை நுகர்வதை ஒக்கும். புதிய நண்பனுடன் அளவளாவுதலும், புதிய நூலே வாசித்தலும் ஒன்றே. இதனையே **மாண்டெயின்** என்னும் பெரியார், "நான் விரும்பாத நண்பர்களிடமிருந்து நீங்கியிருக்க நூல்கள் பயன்படுகின்றன.

அவையே பயிலுந்தோறும் பண்புடையாளர் தொடர்பு போன்று இன்பம் பயக்கின்றன,'' என்றனர். **எய்க்கின்** என்பாரும், "யான் அறிஞர் பலருடன் பழகும் இன்பத்தை அறிஞராலாக்கப்பட்ட நூல்களை வாசித்தலாலே அடைகின்றேன்,'' என்று கூறியுள்ளார். இத்தாலியரான **பெட்ராக்கு** என்பவரும், "நூல்களை முற்கால நண்பருக்கு ஒப்பிடலாம். அவற்றை வாசித்தலால் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த அறிஞரையும் நண்பராகக்கொள்ளலாம்,'' என்றனர். மற்றும் பல அறிஞர்களும் நூல் நிலையப் பயன்களைப் பாராட்டிக் கூறியுள்ளார்கள்.

8. ஆதலின், நாட்டின் முன்னேற்றத்திற்கும் மக்களின் கல்வியறிவு வளர்ச்சிக்கும், செல்வப்பெருக்கிற்கும், நாகரிக முன்னேற்றத்துக்கும் காரணமான நூல் நிலையங்கள் நாடெங்கும் மலிந்து விளங்கச் செய்ய வேண்டுவது தமிழ் மக்கள் யாவரும் மேற்கொள்ள வேண்டிய கடமையாகும். மேனாட்டு மக்கள் ஆயிரக்கணக்கான நூல்களை வாங்கிக் கிராமந்தோறும் நூல் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்; இலட்சக்கணக்கான நூல்கள் அடங்கிய நூல் நிலையங்கள் பலவற்றை அமைத்துள்ளார்கள். யாத்திரை செல்லும் நூல் நிலையங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அன்னியர்களைப் பார்த்தாயினும், நம் நாட்டில் வீணான விஷயங்களில் செலவிடும் பணத்தைக்கொண்டு நூல்களை வாங்கி, ஆங்காங்கு நூல் நிலையங்களை நிறுவுதல் வேண்டும். பண்டைக்கால ஏடுகள் பழுதுறு வண்ணம் அவற்றையும் சேகரித்து **ஏட்டு நூல் நிலையங்களும்** நிறுவுதல்

வேண்டும். இவ்வாறு நாட்டின் ஒவ்வொரு கிராமத்திலும் நூல் நிலையங்களேற்படுமாயின், நம் தாய்நாடு பிற நாடுகளையொப்ப முன்னேறி, வளம் மிக்க நாடாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை.

**சொற்பொருள் விளக்கம் :**

கவின் - அழகு, கருந்தனம் - பெருஞ்செல்வம், துய்க்க - அனுபவிக்க, தெற்றென - தெளிவாக, தொகை - தொகுக்கப் பட்டது, நிறுவப்பட்டுள்ளன - ஏற்படுத்தப்பட்டுள்ளன, நியமங்கள் - விதிகள், ஆசான் - ஆசிரியன், அமைவர - பொருத்தமாக, கூறு - பாகம், உறுதுணை - பேருதவி, கா - சோலை, பண்புடையாளர் - மேலோர், மலிந்து - பெருகி, திகழும் - விளங்கும்.

**பயிற்சி :**

1. எதிர்ச்சொல் எழுது:—அரிய, விரிவு, பெருகு, ஒழுக்கம்.

2. பொழுது போக்க, விருத்தி செய்ய, தெற்றென, சிறந்தோங்க, நிரம்பப் பெற்றுள்ள—இவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டு.

**வினாக்கள் :**

1. கல்வியாகிய கண்ணில்லாதார் எவற்றைக் கண்டு ஆனந்திக்க முடியாது ?

2. மேனாட்டினர் கல்வியைப் பரப்பக் கையாளும் சிறந்த சாதனம் யாது ?

3. இச்சாதனத்தைக் கையாண்டு அவர்கள் அடைந்த பயன் யாது ?

4. நமது நாட்டில் முன்பு நூல் நிலையம் இருந்தது என்பதற்குச் சான்று யாது ?

5. நமது நாட்டில் நூல் நிலையங்களாய் இருந்தவை யாவை ?

6. முற்கால நூல் நிலையங்களால் பொதுமக்கள் பயனடையாததற்குக் காரணம் யாது?

7. மேனாட்டில் காணப்படும் நூல் நிலையங்கள் எவ்வாறு செயலாற்றுகின்றன?

8. நம் நாட்டில் நூல் நிலையங்கள் பெருக நாம் செய்ய வேண்டுவது யாது?

9. நூல் நிலையங்களில் எத்தகைய நூல்கள் இருத்தல் வேண்டும்?

10. நூல் நிலையங்கள் மாணவருக்கு எவ்வாறு பயன்படும்?

11. நூல் நிலையங்களைப் பற்றி மாண்டெயின் கூறுவது என்ன?

12. எய்க்கின் என்பார் நூல் நிலையங்களால் எத்தகைய இன்பம் பெறுவதாகக் கூறியுள்ளார்?

13. தமிழ் மக்கள் நிறுவ வேண்டிய நூல் நிலையம் யாது?

### கட்டுரையாக்கப் பயிற்சி :

'நூல் நிலையங்களின் பயன்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

### இலக்கணம் :

**பெருக்கும் நூல்**
**வாழ்ந்த அறிஞர்**
**விளங்குகின்ற நாடு**

'பெருக்கும், வாழ்ந்த, விளங்குகின்ற' என்னும் எச்சவினைச்சொற்கள் நூல், அறிஞர், நாடு என்ற பெயர்ச்சொற்களைக் கொண்டு முடிந்தன. இவ்வாறு பெயர்ச்சொற்களைக் கொண்டு முடியும் எச்ச வினைச்சொல் **பெயரெச்சம்** எனப்படும். பெயரெச்சங்கள் **இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்** என்னும் முக்காலங்களுள் ஒன்றை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் காட்டும்.

# 14. பாமரர் நீதி

## காட்சி-1

**பாத்திரங்கள் :** சுப்பன், முத்து—குடியானவர்கள்.
**இடம் :** வயற்புறம்.

**சுப்பன் :** (வயலை உழுதுகொண்டே) ஆஹா! என் வாழ்க்கையே வாழ்க்கை! காலையில் எழுந்தேன்; கஞ்சியைக் குடித்தேன்; காளையை அவிழ்த்தேன்; கலப்பையிற்பூட்டினேன்; கடுவெயில் ஏறுமுன், வேலையை முடிப்பேன். நேற்று முத்தண்ணன் வயல், இன்று என் வயலாயிற்று. இனி எனக்கு என்ன குறை?

(திடீரெனக் கணீர் என்ற ஓசை கேட்கின்றது.)

என்ன சத்தம்!

(குனிந்து பார்க்கிறான். செப்புப் பானை ஒன்றின்மீது கலப்பையின் கொழு உராய்ந்திருப்பதைக் கண்டு, பானையை எடுக்கிறான். அதனுள் தங்க நாணயங்கள் இருக்கின்றன.)

தங்கம்! தங்கம்! இனி, பணத்துக்குப் பஞ்சம் இல்லை! என் பாடு கொண்டாட்டந்தான்!

(சிறிது யோசிக்கிறான்.)

என்ன ஆசை கொண்டுவிட்டேன்! முத்தண்ணன் வயலன்றோ இது! நேற்று முன் தினந்தானே நான் இதை வாங்கினேன்! எனக்கு இது சொந்தமாகுமா! இது அவனைச் சேர வேண்டுவதல்லவா!

(பானையைத் தூக்கிக்கொண்டு முத்துவின் வீட்டையடைகிறான்.)

அண்ணா, அண்ணா, நல்ல செய்தி!

**முத்து :** என்ன சுப்பா, எனக்கு என்ன நல்ல செய்தி வரப்போகிறது ?

**சுப்பன் :** அண்ணு, இதோ ! இந்தப் பானை-யிலுள்ள தங்கம் முழுவதும் உனக்குத்தான் அண்ணு !

**முத்து :** தம்பி, தங்கமா ? எனக்கா ?

**சுப்பன் :** ஆம் அண்ணு, அவ்வளவும் உனக்-குத்தான்.

**முத்து :** எனக்கு விளங்கவில்லையே ! எனக்-காக யார் இதைக் கொடுத்திருப்பார் ?

**சுப்பன் :** மனிதர் யாரும் கொடுக்கவில்லை. பூமி தேவிதான் அண்ணு உனக்குக் கொடுத்தாள்.

**முத்து :** என்ன சுப்பா, பூமி தேவியா ? அவள் யார் ?

**சுப்பன் :** அவள்தான் உன்னுடைய வயல்.

**முத்து :** எனக்கேது வயல் ? அதுதான் இப்-போது உனதாகிவிட்டதே !

**சுப்பன் :** வயல் எனதுதான். ஆனால்......

**முத்து :** ஆனால், என்ன? விவரமாகச் சொல்.

**சுப்பன் :** அண்ணு, உன்னிடம் வாங்கிய வயலை இன்று உழ ஆரம்பித்தேன். இரண்டு மூன்று சால் உழுதிருப்பேன். 'கணீர்' எனச் சத்தம் கேட்டது. குனிந்து பார்த்தேன் ; இப்-பானையைக் கண்டேன் ; உன்னிடம் கொண்டு வந்தேன்.

**முத்து :** தம்பி, இதை என்னிடம் ஏன் கொண்டு வந்தாய் ? உன் வயலில் கிடைத்தது உனக்குத்தானே உரியது !

**சுப்பன் :** அண்ணு, நான் நேற்று முன் தினம் உன்னிடம் வயலை வாங்கினேன் ; உன்

வயலுக்குத்தான் பணம் கொடுத்தேன் ; அதிலுள்ள தங்கத்துக்கும் சேர்த்துப் பணம் கொடுக்கவில்லையே !

**முத்து** : தம்பி, நீ சொல்வது சரியன்று. வயலை உன்னிடம் என்றைக்கு விற்றுவிட்டேனே, அன்றைக்கே அதிலுள்ள யாவும் உனக்குச் சொந்தம். கடவுள் உனக்குக் கொடுத்திருக்கிறார் ; சந்தோஷமாக எடுத்துக்கொள்.

**சுப்பன்** : அண்ணா, உன் வயலில் இனிமேல் விளைவதுதான் எனக்கு உரியதாகுமே தவிர, நான் வாங்கிய சமயத்தில் அதில் இருந்த புதைபொருள் எனக்குச் சொந்தமாகாது. பத்திரத்தில் மரங்கள், செடிகள் முதலியன எனக்குச் சொந்தமாகும் என்று எழுதப்பட்டு இருக்கிறதேயொழியப் புதைபொருள்களைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லையே! அதனால், இது உனக்குரியதுதானே ?

**முத்து** : நீ என்ன சொன்னாலும் சரி, நான் இதை எடுத்துக்கொள்ளப்போவதே இல்லை. வயலை உனக்கு விற்றுவிட்டேன் ; விற்ற மாட்டிற்கு விலை ஏது ?

**சுப்பன்** : அண்ணா, நான் கொடுத்த பணம் இந்தத் தங்கத்தின் மதிப்பில் நூற்றில் ஒரு பங்குகூட இராதே ! நீ எனக்கு விற்ற சமயத்தில் நான் இந்தத் தங்கத்துக்குரிய விலையையும் தந்திருக்க வேண்டும். அப்படித் தரவில்லையல்லவா ! அதனால், இதை நீ இப்போது பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

**முத்து** : சுப்பா, என்னைத் தொந்தரவு செய்யாதே. வயலை விற்றுவிட்டேன் ; இனி அதில் எனக்கு உரிமை இல்லை. உனக்குத்தான் அதில்

உரிமை உண்டு. அதில் கிடைத்ததை நீதான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**சுப்பன் :** அண்ணு, அப்படிச் சொல்லாதே. உனக்குரியதை நான் எடுத்துக்கொள்ள மாட்டேன். நான் இதை எடுத்துக்கொள்வது உன்னை வஞ்சித்ததற்கு ஒப்பாகும். வஞ்சிப்பது அன்பிற்குரிய செயலன்று; யோசித்துப் பார்.

**முத்து :** என் மனச்சாட்சிக்கு மாருக நான் ஒன்றும் செய்ய மாட்டேன். நீ போய் வா.

**சுப்பன் :** அண்ணு, அப்படியானுல், அரசரிடம் வா. நமது வழக்கை அவரிடம் சொல்லுவோம்.

**முத்து :** நான் வருகிறேன். அரசர் நீதி தெரிந்தவர். வா, போகலாம்.

## காட்சி–2

> **பாத்திரங்கள் :** அரசன் அமைச்சர் முதலியோர்.
> **இடம் :** அரண்மனை அவைக்களம்.

(சுப்பனும் முத்துவும் பானையைத் தூக்கிக்கொண்டு அரண்மனை அடைகின்றனர்.)

**காவலன் :** ஐயா, நீங்கள் வந்த காரணம் என்ன?

**சுப்பன் :** ஐயா, அரசரைக் காண வந்தோம்; நாங்கள் உள்ளே போகலாமா?

**காவலன் :** இங்கு நில்லுங்கள். அரசரிடம் தெரிவித்து வருகிறேன்.

(காவலன் செல்கிருன்.)

**காவலன் :** (அரசனை வணங்கி) அரசரே, குடியானவர் இருவர் உங்களைக் காண வந்திருக்கின்றனர்.

**அரசன் :** அவர்களை இங்கு வரச்சொல்.

(காவலன் சென்று சொல்லுகிருன். முத்து, சுப்பன் இருவரும் அவைக்களம் அடைந்து அரசனை வணங்குகின்றனர்.)

**முத்துவும் சுப்பனும் :** மகாராசா, நீங்கள் நீடூழி வாழ்க !

**அரசன் :** உங்கள் குறை என்ன ?

**இருவரும் :** மகாராசா.........

**அமைச்சர் :** இருவரும் சேர்ந்து சொல்ல வேண்டா ; தனித்தனியே சொல்லுங்கள்.

**சுப்பன் :** மகாராசா, நான் இந்த முத்தண்ணனிடமிருந்து ஒரு வயலை வாங்கினேன். இன்று காலையில் அதில் உழும் போது இந்தப் பானை இருந்தது. இதை இவரிடம் கொடுத்தேன். இவர் 'எடுத்துக்கொள்ள மாட்டேன்,' என்கிருர்.

**அரசன் :** (முத்துவை நோக்கி) நீ என்ன சொல்லுகிருய் ?

**முத்து :** மகாராசா, இரண்டு நாட்களுக்கு முன் என் வயலை இந்தச் சுப்பனுக்கு விற்றுவிட்டேன். இன்று காலையில் இந்தப் பானையை அந்த வயலில் இருந்ததாகச் சொல்லி, என்னை எடுத்துக்கொள்ளச் சொல்லுகிருன். நான் "மாட்டேன்" என்கிறேன். இங்கு அழைத்து வந்திருக்கிருன்.

**அரசன் :** என்ன ! பணம் கிடைக்கும்போது வேண்டாவென்று சொல்பவரும் உண்டா ! நீ ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது ?

**முத்து :** வயலை விற்றுவிட்ட பிறகு, அதில் எனக்கு உரிமை ஏது? நான் பிறர் காசுக்கு ஆசைப்படுகிறவனல்ல, மகாராசா!

**அரசன் :** (சுப்பனை நோக்கி) அவன் உனக்குத்-தான் உரியது என்று சொல்லும்போது, நீ ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது?

**சுப்பன் :** மகாராசா, அந்த வயலை நான் வாங்கும்போதே இந்தப் பானையும் அதிலிருந்தது என்பது இப்போதுதான் தெரிகிறது; இதற்கு நான் பணம் கொடுக்கவில்லையே! பணத்தைக் கொடுக்காமல் பிறருக்குரிய பொருளை எடுத்துக்-கொள்வது அன்பின் செயலாகுமா? நீங்களே சொல்லுங்கள்.

**அரசன் :** (அமைச்சரை நோக்கி) இந்த வழக்கை எவ்வாறு முடிவு செய்வது? இருவரும் கள்ளங்-கபடமற்றவராயிருக்கின்றனர். எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே!

**அமைச்சர் :** (சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சுப்பனை நோக்கி) உனக்கு எத்தனை பிள்ளைகள் இருக்-கிறார்கள்?

**சுப்பன் :** ஐயா, எனக்கு ஒரே ஒரு மகன் இருக்கிறான்.

**அமைச்சர் :** சரி, அவனுக்கு எத்தனை வய திருக்கும்?

**சுப்பன் :** ஐயா, அவனுக்குப் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதிருக்கும்.

**அமைச்சர் :** இன்னும் கலியாணம் ஆக-வில்லையோ?

**சுப்பன் :** ஐயா, இன்னும் ஆகவில்லை. அதற்குப் பணம் வேண்டுமே! கொஞ்சம் பணம்

வைத்திருந்ததைக் கொடுத்துத்தான் முத்தண்ணன் வயலை வாங்கினேன். இன்னும் பணம் சேர்த்துத்தான் கலியாணம் முடிக்க யோசித்திருக்கிறேன்.

**அமைச்சர்** : (முத்துவை நோக்கி) உனக்கு மக்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

**முத்து** : ஐயா, எனக்கு இருப்பவள் ஒரே பெண்தான்.

**அமைச்சர்** : அப்பெண்ணுக்கு வயது என்ன?

**முத்து** : பதினாறு வயதாகிறது.

**அமைச்சர்** : இன்னும் கலியாணம் ஆகவில்லையோ?

**முத்து** : கலியாணத்திற்குக் காசு வேண்டுமென்றுதானே என் வயலைச் சுப்பனுக்கு விற்றுவிட்டேன்? இந்த வருடத்தில் நடத்த யோசித்திருக்கிறேன்.

**அமைச்சர்** : சரி, நீங்கள் இருவரும் சிறிது நேரம் வெளியே செல்லுங்கள்.

(சுப்பனும், முத்துவும் வெளியே செல்கின்றனர்.)

**அமைச்சர்** : (அரசனை நோக்கி) அரசரே, இந்த வழக்கில் தீர்ப்புக் கூறுவது கஷ்டம். இவ்விருவருள் ஒருவனுக்குப் புதல்வனும், மற்றொருவனுக்குப் புதல்வியும் இருக்கிறார்கள். அவர்கள் இருவருக்கும் மணம் முடித்து இந்தத் தங்கத்தை அவர்களுக்கு வெகுமதியாகக் கொடுப்பதே நலமென்று நினைக்கிறேன். உங்கள் விருப்பம் என்ன?

**அரசன்** : அமைச்சரே, உமது அறிவை மெச்சினேன்! இதுவே தக்க வழி!

(அமைச்சர், சுப்பன், முத்து இருவரையும் அழைத்து வரச் செய்கிறார்.)

**அரசன் :** உங்கள் வழக்கைப்பற்றி ஆராய்ந்தோம். உங்கள் இருவருக்கும் ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கின்றார்கள் அல்லவா? அவர்களுக்குத் திருமணம் முடித்துக் கலியாணப் பரிசாக இந்தத் தங்கம் முழுவதையும் அவர்கள் இருவருக்குமே கொடுத்துவிடுங்கள். இதுவே என் கட்டளை.

**சுப்பன் முத்து இருவரும் :** மகாராசா, உங்கள் விருப்பப்படியே செய்யக் காத்திருக்கிறோம்.

(இருவரும் வணங்கிச் செல்கின்றனர்.)

**சொற்பொருள் விளக்கம் :**

செப்புப்பானை-செம்பு + பானை, பஞ்சமில்லை-குறைவில்லை, வஞ்சிப்பது - ஏமாற்றுவது, பரிசு - இனும்.

**பயிற்சி :**

சால், கணீர், மனச்சாட்சி, கள்ளங்கபடமற்ற—இவற்றை உபயோகித்து வாக்கியங்கள் எழுது.

**வினுக்கள் :**

1. சுப்பன் செப்புப் பானையை முத்துவுக்குக் கொடுக்க விரும்பியது ஏன்?

2. முத்து அதை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை?

3. அமைச்சர் வழக்கை எவ்வாறு தீர்த்தார்?

4. 'பாமரர் நீதி' என்ற தலைப்பு இந்நாடகத்துக்குப் பொருந்துமா?

**இலக்கணம் :**

1. வாங்கிய வயல், குனிந்து பார்த்தேன், விற்ற மாடு, சொல்லிச் சென்றான்—இவற்றிலுள்ள எச்சங்கள் என்ன எச்சங்கள் ?

2. அரிய பொருள், பெரிய மனிதர், பசிய இலை—அரிய, பெரிய, பசிய என்ற பெயரெச்சங்கள் அருமை, பெருமை பசுமை என்ற பண்புப் பெயர் அடியாகப் பிறந்த பெயரெச்சங்கள் ; இவை குறிப்பாகக் காலம் காட்டுவன ; ஆதலின், குறிப்புப் பெயரெச்சங்கள் எனப்படும்.

வந்த, செல்கின்ற, வாங்கும் என்பன போன்ற பெயரெச்சங்கள் வெளிப்படையாகக் காலம் காட்டுவதால், தெரிநிலைப் பெயரெச்சங்கள் எனப்படும்.

# செய்யுட்பகுதி

## I. வாழ்த்துப் பகுதி

### 1. திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே! 1

—மாணிக்கவாசகர்

### 2. திருவருட்பா

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்;
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்;
வாயார வாழ்த்துகின்றார் மனத்தமர்ந்த தெய்வம்;
மலரடிஎன் சென்னிமிசை வைத்தபெருந்
தெய்வம்;
காயாது கனியாகிக் கலந்தினிக்கும் தெய்வம்;
கருணைநிதித் தெய்வம்; முற்றும் காட்டுவிக்கும்
தெய்வம்;
சேயாக எனைவளர்க்கும் தெய்வம்; மகா தெய்வம்;
திருச்சபையில் விளங்குகின்ற தெய்வம்அதே
தெய்வம். 2

—இராமலிங்க அடிகள்

### 3. இரட்சணிய யாத்திரிகம்

ஓதியே சுருதி தினம்தினம் படித்தும்
உணர்விலா(து) உலகொழுக்(கு) உவந்து
தீதிலே பயின்று செந்நெறி யிகந்த
தீயனேன் உய்யுமா(று) அறியேன்!

கோதிலா நீதிக் கொழுங்கதிர்ப் பிழம்பே!
குணிப்பருங் கருணைவா ரிதியே!
ஆதியே! அடியேன் நின்சரண் அடைந்தேன்!
அஞ்சலென் றடைக்கலம் அருளே! 3

—H. A. கிருஷ்ண பிள்ளை

## 4. சீருப்புராணம்

திருவினும் திருவாய், பொருளினும் பொருளாய்,
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய், அணுவினுக் கணுவாய்,
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே.

—உமறுப் புலவர்

### ஆசிரியர் வரலாறு:

1. ஆசிரியர் - மாணிக்கவாசகர்; பெற்றோர்: தந்தையார் - சம்புபாதாசிருதர், தாயார் - சிவஞானவதியார்; பிறப்பிடம் - திருவாதவூர்; தொழில் - அமைச்சர் தொழில்; திருப்பெருந்துறையில் சிவபிரானல் ஆட்கொள்ளப்பட்டார். நரியைப் பரியாக்கிய செயல் இவர் காரணமாக நிகழ்ந்ததென்பர். காலம் 9-ஆம் நூற்றுண்டு. திருவாசகம் - இனிய அழகிய சொற்களால் ஆகிய நூல். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்,' என்பது இதனைச் சிறப்பிக்கும்.

### அருஞ்சொற்பொருள்:

வான் - ஆகாயம், வளி - காற்று, ஊன் - உடம்பு, கோன் - தலைவன், கூத்தாட்டுவான் - நல்வினை தீவினைகளின் பயனை அனுபவிக்கச் செய்து கூத்தாடச் செய்பவன்.

இறைவன் ஐம்பெரும் பூதங்களாய், எல்லாப் பொருளு-மாய், யாவருக்கும் தலைவனாய் உயிர்களிற் கலந்து தன் விருப்-பப்படியே அவற்றை நடத்துவிக்கின்றவன் என்பது இச்செய்யு-ளின் கருத்து.

### ஆசிரியர் வரலாறு :

2. ஆசிரியர் - இராமலிங்க அடிகள், மருதூரில் கருணீகர் குலத்திற் பிறந்தவர் ; பெற்றோர் - இராமைய பிள்ளை, சின்னம்-மையார்; சமரசக் கொள்கையைப் பரப்பியவர்; அருட்பிரகாச வள்ளலார் என வழங்கப்பட்டார். காலம் கி. பி. 1823 முதல் 1873 வரை. இவரியற்றிய பாடல்கள் திருவருட்பா எனப்படும்.

### அருஞ்சொற்பொருள் :

நிகர் - சமம், தாங்குகின்ற - காப்பாற்றுகின்ற, தலைமை - முதன்மை, மலரடி - மலர் போன்ற பாதங்கள், சென்னி - தலை, சேய் - குழந்தை, நிதி - செல்வம், திருச்சபை - அழகிய சபை.

தாயும் தந்தையுமாய்த் தன்னை நினைப்பவருக்கருள் செய்து இன்பம் பயந்து அன்பு பாலிப்பவர் இறைவர் என்பது கருத்து.

### ஆசிரியர் வரலாறு :

3. ஆசிரியர் - கிருஷ்ண பிள்ளை; முதலில் வைஷ்ணவரா-யிருந்து தம் 31-ஆம் வயதில் கிறிஸ்தவரானார் ; ரெட்டியார்-பட்டி வித்துவான், கிறிஸ்தவக் கம்பர் எனப்படுவார்.

### அருஞ்சொற்பொருள் :

சுருதி - சமய நூல், உலகு ஒழுக்கு - உலகத்தவர் விரும்பும் நடத்தை, பயின்று - பொருந்தி, இகந்த - நீங்கிய, கோது - குற்றம், பிழம்பு - திரட்சி, குணிப்பரு - அளவிட அரிதான, ஆதி - முதல்வன்.

"அருள் நிறைந்த குற்றமில்லாத ஒளிமயமான முதல்-வனே, உன்னைத் தஞ்சமென்றடைந்த என்னை, 'நன்னெறி விலகிச் சிற்றின்பம் கருதிச் சமயநூல் வழி ஒழுகாத தீயவன்,' என எண்ணாது, அடைக்கலங் கொடுத்தாண்டருள்வாய்," என்-பது கருத்து.

### ஆசிரியர் வரலாறு :

4. ஆசிரியர் - உமறுப் புலவர் ; எட்டையபுரத்து அரசரின் அவைப் புலவர் ; சீதக்காதி என்னும் மகம்மதிய வள்ளலின் முன் இந்நூலை அரங்கேற்றினர். காலம் 17-ஆம் நூற்றுண்டு.

### அருஞ்சொல் விளக்கம் :

திரு - செல்வம், தெளிவு - அறிவு, மரு - மணம், பொரு - ஒப்பு, பேரொளி - மிக்க ஒளி, கருத்தனை - தலைவனை.

'எவ்வகைப் பொருளிலும், அணுவிலும் கலந்து நிகரிலா ஒளியாய் விளங்கும் இறைவனை வணங்குதலே தக்கது,' என்பது கருத்து.

### பயிற்சி :

1. **பிரித்தெழுது** :—யானெனதென்று, மனத்தமர்ந்த, உணர்விலாது, கோதிலா, பேரொளி.

2. **பொருள் கூறு** :—வளி, கோது, ஆதி, அஞ்சல், மரு, பூதலம்.

### வினுக்கள் :

1. இறைவர் உயிர்களை எவ்வாறு ஆட்டுவிக்கின்றுர் ?
2. இறைவர் நமக்கு எவ்வாறு உதவுகின்றுர் ?
3. சமயநூல் கற்றும் மக்கள் எவ்வாறு ஒழுகுகின்றுர்கள் ?
4. கடவுள் எத்தகையவர் ?
5. கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றுர் என்பதை **உமறுப் புலவர்** எங்ஙனம் விளக்கியிருக்கின்றுர் ?

# II. நீதிப் பகுதி

## 1. நன்னெறி

உள்ளம் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க ;—வெள்ளம்
தடுத்தல் அரிதோ ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ ? விளம்பு. 1

இல்லானுக்(கு) அன்பிங்(கு) இடம்பொருள் ஏவல்மற்(று)
எல்லாம் இருந்துமவற்(கு) என்செய்யும் ?–நல்லாய் !
மொழியிலார்க்(கு) ஏது முதுநூல் ? தெரியும்
விழியிலார்க்(கு) ஏது விளக்கு ? 2

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண்(டு) உள்ளம்
எரியின் இழுதாவர் என்க ;—தெரியிழாய் !
மண்டு பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 3

கைம்மா(று) உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர் ;—அம்மா !
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. 4

—சிவப்பிரகாசர்

## 2. நீதி நெறி விளக்கம்

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணுர் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 1

வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்(டு) அரிப்பரித்தாங்கு
எய்த்துப் பொருள்செய் திடல். 2

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்(று) அகமகிழ்க ;—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக 'கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம்!' என்று. 3

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு :—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். 4

—குமரகுருபரர்

## 1. நன்னெறி

### ஆசிரியர் வரலாறு :

ஆசிரியர் :—துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் சகோதரர்கள் கருணைப்பிரகாசர், வேலையர் என்பவர்கள். காலம் 280 ஆண்டுகளுக்கு முன்.

### அருஞ்சொல் விளக்கம் :

நன்னெறி—நல்ல நெறிகளைக் கூறும் நூல்.

1. கவர்ந்து - தன் வசப்படுத்தி, சினங்காத்து-கோபத்தை அடக்கி, தடங்கரை - விசாலமான கரை, அரிதோ - கஷ்ட மானதோ?

கோபத்தை அடக்குதலே சிறந்த குணமாகும்,

2. இல்லானுக்கு - அன்பு இல்லாதவனுக்கு, இங்கு - இவ் வுலகத்தில், ஏவல் - ஏவலாளர், நல்லாய் - பெண்ணே, மொழி யிலார் - ஊமையர், விழியிலார் - குருடர்.

அன்பில்லாவிடின் பிற செல்வங்களால் யாதும் பயனின்று.

3. நோய் - துன்பம், இழுது - நெய், இழை - இழாய் - ஆபரணத்தையணிந்த பெண்ணே, மண்டு - மிக்க, கலுழும் - வருந்தும்.

பெரியோர் பிறர் துன்பத்தையும் தம் நோய் போலக் கருதித் துன்புறுவர்.

4. கைம்மாறு - பதிலுதவி, உகவாமல் - விரும்பாமல், எயிறு - பல், முதிர்சுவை - மிக்க சுவையான பண்டங்கள், வலியன - கடினமான பொருள்கள்.

பெரியோர் பிரதியுபகாரத்தை எதிர்பாராமல் பிறர்க்கு உதவி செய்வர்.

## 2. நீதி நெறி விளக்கம்

### ஆசிரியர் வரலாறு :

ஆசிரியர் :—குமரகுருபரர். பிறப்பிடம் — கைலாசபுரம் என்னும் ஸ்ரீவைகுண்டம். இவர் ஐந்து வயதில் கவி பாடியவர்; காசி வரையிற்சென்று கவி பாடியவர் ; நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர்.

### அருஞ்சொல் விளக்கம் :

1. அவை - சபை, மெய் விதிர்ப்பார் - உடல் நடுங்குகின்றவர், ஆகுலச் சொல் - ஆரவாரச் சொல் (பயனற்ற சொல்), நவை - குற்றம், ஈத்து - கொடுத்து, நல்கூர்ந்தார் இன்னலமும் - வறியவரின் இனிய அழகும், பூவாமை - தோன்றுமை.

2. ஓம்பாது - பாதுகாவாமல், பரிந்து -விருப்பங்கொண்டு, கைத்தலத்த - கையிலுள்ளவை, உய்த்து - சுமந்து சென்று, எய்த்து - வருந்தி.

கற்றவற்றை மறந்து மீண்டும் கற்கத் தொடங்கல் அறியாமையேயாகும்.

3. உடைமை - செல்வம், கருத்து - எண்ணம், இவர்க்கு - இவர் கற்ற கல்விக்கு, எற்று - எவ்வளவினது.

செல்வப் பொருளில் மன நிறைவும், கல்விப் பொருளில் மேலும் மேலும் முயற்சியும் வேண்டும்.

4. சுட்டு - நன்மதிப்பு, வேண்டுவான் - விரும்புபவன், நோற்பது - முயல வேண்டுவது, சீர் - நற்குணம், தூற்றி - பலருமறியச் சொல்லி, சிறுமை - தீய குணம், புறங்காத்து - வெளி விடாமல் அடக்கி, தாழ்ச்சி - பணிவான சொற்கள்.

**பயிற்சி :**

**பிரித்தெழுது** :—கவர்ந்தெழுந்து, பிறவுறுப்பை, ஈத்துண்ணூர், நோற்பதொன்றுண்டு, சீரெல்லாம்.

**வினுக்கள் :**

1. எளிது எது? அரிது எது?
2. சிறந்த குணம் யாது?
3. செல்வத்தால் யாருக்குப் பயனின்று?
4. கண், எயிறு இவற்றின் செயலால் அறியவேண்டுவதென்ன?
5. தோன்றலினும் தோன்ருதிருக்க வேண்டுவன யாவை?
6. அரிப்பு அரித்துப் பொருள் சேர்த்தலைப் போன்றது எது?
7. எதனை நோக்கிக் கருத்தழிதல் வேண்டும்?
8. பிறர் நன்மதிப்பைப் பெறச் செய்யவேண்டுவது யாது?

## 3. திருக்குறள்

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ரேன் எனக்கேட்ட தாய். 1

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்! ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 2

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். 3

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்(கு)
அணி ;அல்ல மற்றுப் பிற. 4

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 5

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 6

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 7

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு. 8

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 9

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின். 10

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் ? 11

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு. 12

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின் ? 13

உள்ளத்தான் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தான் கள்வேம் எனல். 14

எல்லா விளக்கும் விளக்கல்ல ? சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 15

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் ; தீய
பிறத்தல் அதனான் வரும். 16

பிறர்க்கின்னு முற்பகல் செய்யின், தமக்கின்னு
பிற்பகல் தாமே வரும். 17

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு. 18

கண்ணுடையர் என்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 19

தொட்டனைத் தூறு மணற்கேணி ; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. 20

எனைத்தானு நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 21

அறிவுடையார் ஆவ தறிவார் ; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 22

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு ? 23

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 24

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 25

மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி ; இனத்தானும்
இன்னான் எனப்படுஞ் சொல். 26

கொக்கொக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 27

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 28

பெருங்கொடையோன் பேணுன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில். 29

வேலன்று வென்றி தருவது ; மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின். 30

துளியின்மை ஞாலத்திற் கெற்(று)?அற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. 31

உள்ளம் உடைமை உடைமை ; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 32

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும் ;
பெருமை முயற்சி தரும். 33

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றுந் தூண். 34

வன்கண் குடிகாத்தல்கற்றறிதல் ஆள்வினையொ(டு)
ஐந்துடன் மாண்ட தமைச்சு. 35

பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. 36

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 37

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. 38

நிறைநீர நீரவர் கேண்மை ; பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. 39

மருவுக மாசற்றார் கேண்மை;ஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 40

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 41

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 42

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் ; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். 43

இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 44

யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 45

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். 46

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 47

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்திய(து)
அற்றது போற்றி உணின். 48

எண்ணித் துணிக கருமம் ; ' துணிந்தபின்
எண்ணுவம்,' என்ப(து) இழுக்கு. 49

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல். 50

**ஆசிரியர் வரலாறு :**

ஆசிரியர்—திருவள்ளுவர் ; திருமைலாப்பூரில் வாழ்ந்தவர் ; வள்ளுவ குலத்தினர் ; நெய்தற்றொழில் புரிந்தவர். காலம் - சங்ககாலம் (கி. பி. 2-ஆம் நூற்றாண்டு). இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பிரிவு கொண்டது.

1330 குறட்பாக்கள் அடங்கியது. இதனை மேனாட்டாரும் போற்றியுள்ளனர்.

### அருஞ்சொற்பொருள் :

1. ஈன்ற-பெற்ற, பெரிதுவக்கும் - மிகுதியும் சந்தோஷிப்பாள், சான்றோன் - அறிவிற்பெரியோன்.

மக்கள் நற்குணமுடையவர்களாயிருப்பதே பெற்றோர்க்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

2. தாழ் - தாழ்ப்பாள், ஆர்வலர் - அன்பர், புன்கண்ணீர் - அற்பக் கண்ணீர், பூசல் - எல்லோருமறிய வெளிப்படுத்துதல்.

அன்பு செலுத்தப்பட்டவரது துன்பம் கண்டு இரங்காதார் இலர்.

3. அகனமர்ந்து - மனம் விரும்பி, செய்யாள் - திருமகள், ஓம்புவான் - போற்றுபவன், முகனமர்ந்து - முகமினியனாய்.

விருந்தினரை உபசரிப்பவனது இல்லின்கண் செல்வம் பெருகும்.

4. அணி - அழகு, பிற - பிற ஆபரணங்கள்.

தாழ்மையும் இன்சொல்லுமே ஒருவனுக்கு அழகு செய்யும் ஆபரணங்களாம்.

5. ஞாலம் - உலகம், காலத்தினால் - ஆபத்துக் காலத்தில்.

ஒருவனுக்குத் துன்பம் வந்த இடத்துச் செய்யும் உதவி இப்பூவுலகைவிடப் பெரிதாகும்.

6. ஒறுத்தார் - தண்டித்தவர், பொன்றும் - அழியும், துணை - அளவு.

ஒருவர் செய்த குற்றத்தைப் பொறுத்தவர் புகழ்பெற்று எக்காலும் இன்பம் பெறுவர்; பொருது பதில் துன்பம் செய்தவர்க்குச் செய்த அச்சமயமே இன்பம் ஏற்பட்டு மறையும்.

7. அழுக்காறு - பொறாமை, ஒரு - ஒப்பற்ற, செற்று - அழித்து, தீயுழி - நரகத்தில்.

பொறாமை தன்னையுடையவனது செல்வத்தையழித்து அவனை நரகத்திற்சேர்க்கும்.

8. வெஃகா - விரும்பாத.

பிறர் பொருளை விரும்பாதவரையே செல்வம் நாடியடையும்.

9. பக - பிரிக்க, கேளிர் - உறவினர், நக-கூடி மகிழுமாறு.

89521 சென்னை-600 008.

நட்பாளுந்திறனில்லாதவரே உறவினருக்குள் பகை ஏற்படச் செய்பவர்.

10. பயன் மரம் - பழுத்த மரம், நயன் - நயம், படின் - உண்டாயின்.

பிறர்க்கு நன்மை செய்பவனது செல்வம் பழுமரம் ஊரினுள் பலருக்குப் பயன்படுதலைப் போன்றதாகும்.

11. வன்கணவர் - அருள் இல்லாதவர், ஈத்துவக்கும் - கொடுத்து மகிழும்.

பணத்தைப் பிறர்க்குக் கொடாது சேமித்து வைப்பவர், ஈதலால் பெறும் இன்பம் அடையாதவராவர்.

12. இசைபட - புகழ் உண்டாக, ஊதியம் - பயன்.

மக்கள் பிறவி எடுத்ததன் பயன், வறியார்க்கு வழங்கிப் புகழ் பெறுதலேயாம்.

13. எவன் - என்ன, தோற்றம் - காட்சி, தான் அறிகுற்றப் படின் - தான் குற்றமென்று அறிந்ததை விடாது போற்றுவானு யின்.

தன் மனமாரக் குற்றஞ்செய்து ஒழுகுபவனது வெளிவேடத்தால் பயன் யாதுமின்று.

14. உள்ளல்-நினைத்தல், கள்வேம் - களவால் அடைவோம்.

பிறன் பொருளை அபகரிக்க மனத்தாலும் எண்ணலாகாது.

15. பொய்யா விளக்கு - பொய்யாமையாகிய விளக்கு.

புற இருள் நீக்கும் பிற விளக்குகளிலும் அக இருள் நீக்கும் வாய்மையாகிய விளக்கே சான்ரேருக்கு அழகு செய்வதாகும்.

16. வெகுளி - கோபம், மறத்தல் - மறப்பானுக.

கோபத்தினுல் தீமை விளைதலால், அதனை விட்டொழித்தல் வேண்டும்.

17. இன்னு - துன்பம், முற்பகல் பிற்பகல் - காலை மாலை.

பிறர்க்குத் துன்பம் செய்யின், அத்துன்பம் தனக்கு விரைவில் வரும்.

18. எஞ்சாமை - இடைவிடாது நிற்றல்.

அரசனுக்கு இருக்க வேண்டிய குணங்கள் இந்நான்குமே யாம்.

19. புண் - அறியாமையாகிய புண்.

காலம் தேயம் இடையிட்டவற்றைப் பார்க்குந் திறனுடைய

கண் கற்ருேருக்கு உண்டு; கல்லாருக்குத் துன்பஞ்செய்யும் ஊனக் கண்ணே உண்டு.

20. தொட்டனைத்து - தோண்டியவளவு.

மணலில் தோண்டிய அளவிற்குத் தண்ணீர் சுரத்தல் போன்று நூல்களைக் கற்ற அளவிற்கே அறிவு மிகும்.

21. எனைத்தானும் - சிறிதாயினும், நல்லவை - உறுதிப் பொருள்கள், ஆன்ற - நிறைந்த.

கேட்ட அளவிற்குக் கேள்வியால் பயனுண்டு.

22. ஆவது - வரப்போவது, அறிவார் - முன்னே அறிய வல்லவர்.

அறிவு, பின்னர் நேர்வதை அறிந்து அதற்கேற்ப நடக்குந் திறனை அளிக்கும்.

23. காண்கிற்பின் - காணக்கூடியவனுயின்.

அவரவர் தத்தம் குற்றத்தை உணருவராயின், உலகில் பழி பாவங்கள் நேரா.

24. தமர் - தம்மவர், தலை - சிறப்புடையது.

பெரியாரைச் சார்ந்தொழுகுதலே ஒருவனுக்குச் சிறந்த வன்மையாகும்.

25. பீலி - மயிலிறகு, சாகாடு - வண்டி, இறும் - முறியும்.

மெலியார் பலர் சேரின் வலியானும் தன் வலி இழப்பான்.

26. இனத்தான் - சேர்க்கையால், இன்னுன் - இத்தன்மை யுடையவன்.

இயற்கையறிவு மனத்தினிடமாகத் தோன்றுவது; பிறரால் நல்லவன் தீயவனென வழங்கப்படுதல் அவன் செய்யும் தோழமையைப் பொறுத்ததாகும்.

27. கூம்பும் பருவம் - வினைமேல் செல்லாதிருக்கும் பருவம், சீர்த்த - சிறப்படைந்த.

காலம் வருமளவும் காத்திருந்து, சமயம் வாய்த்த போது கடிதில் வினை செய்தல் வேண்டும்.

28. கட்டளைக்கல் - மாற்றறியும் உரைகல்.

ஒருவனது பெருமைக்கும் சிறுமைக்கும் அவன் செயல்களே காரணமாகும்.

29. பேணுன் - போற்றமாட்டான், மருங்குடையார் - சுற் றத்தினர்.

கோபமில்லாத ஈகையாளனிடத்தே உறவினர் சென்றடை-வர்.

30. கோடாது - கோணுமல்.

அரசனுக்கு வெற்றி தருவது படைப் பலமன்று; அவனது செங்கோலாட்சியேயாம்.

31. துளி - மழைத்துளி, அளி - அருள்.

மழையினும் அரசனது அருளே உயிர்களை வாழ்விக்கும்.

32. உள்ளம் - ஊக்கம், உடைமை - நிலைபெற்ற செல்வமாகும்.

ஊக்கமே மக்களுக்கு அழிவில்லாத செல்வமாகும்.

33. அசாவாமை - கலங்காமை.

துன்பம் கண்டு கலங்காது முயற்சி செய்யின், காரியசித்தி பெறுவர்.

34. விழையான் - விரும்பாதவனுய்.

இன்பம் கருதியே தொழில் செய்யாது துன்பத்தைப்பொறுக்-கும் ஆற்றலுள்ளவனே உறவினர் துன்பத்தை நீக்குபவனுவன்.

35. வன்கண் - உறுதியான தன்மை, ஆள்வினை - முயற்சி.

இவை ஐந்தும் அமைச்சன் குணமாயிருத்தல் வேண்டும்.

36. நல்குரவு - வறுமை.

தீய செயலால் அடையும் செல்வத்தினும் வறியனுயிருத்-தலே நலம்.

37. அடுத்தது - தன்னை அடுத்த பொருளினது தன்மை.

மனத்திற்குக் கண்ணுடியாவது முகமேயாகும்.

38. தள்ளா - தவருத, விளையுள் - விளைச்சல், தக்கார் - மேலோர்.

இதில் நாட்டின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

39. நீரவர் - நல்ல தன்மையுடையவர் (மேன்மக்கள்), நிறை நீர - நிறையும் தன்மையுடையனவாம், பின் நீர - பின் குறையும் தன்மை போலக் குறையும் தன்மையுடையனவாம்.

மேலோர் நட்பு, முன் சுருங்கிப் பின் வளரும்; கீழோர் நட்பு, முன் விரிந்து பின் சுருங்கும்.

40. மருவுக - மேற்கொள்க, ஒருவுக - தள்ளுக.

குற்றமற்ற பெரியாரது நட்பைத் தழுவி, அல்லாதவர் நட்பை விட்டுவிடுதல் வேண்டும்.

41. குன்றுவ - இழிந்தவை.

நற்குடிப் பிறந்தவர் மிக்க செல்வம் பெறினும் இழிந்த செயல்களைச் செய்யார்.

42. மா - மிருகம், நீப்பர் - விடுவர்.

மானமழியுமிடத்து மோலோர் உயிர் துறப்பர்.

43. மேல் - மேலிடம், கீழ் - கீழிடம்.

இடத்தின் தன்மையானன்றித் தம் மனத்தின் தன்மையாலேயே உயர்வு தாழ்வு ஏற்படும்.

44. கை செய்து - கையால் உழுதலைச் செய்து, ஊண் - உண்ணுதல், மாலையவர் - இயல்பாகவுடையவர், கரவாது - ஒளியாமல்.

உழுவோர் தாம் பிறரிடம் யாசியாமல், தாம் பிறர்க்கீவர்.

45. யாகாவார் ஆயினும் - எவற்றைக் காவாதவராயினும், நா காக்க - நாக்கைக் காக்கக் கடவர்.

காக்க வேண்டும் பிறவற்றைக் காவாது போயினும், நாவை அடக்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

46. உள்ளத்து - மனத்தில்.

தன்மனத்தில் பொய்யாமல் ஒழுகுபவனை யாவரும் மதிப்பர்.

47. இன்னுத - வன்சொற்கள்.

துன்பம் விளைக்கும் இன்னுச் சொற்கள் காயைப் போன்றன; இன்பம் தரும் இனிய சொற்கள் நன்மை பயக்கும் கனியைப் போன்றன.

48. யாக்கை - உடல், அற்றது - செரித்தது.

உணவு செரித்த பின் உணவு கொள்பவர் நோயால் வருந்த மாட்டார்.

49. இழுக்கு - குற்றம்.

ஆராய்ந்தறிந்த பின்னரே ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குதல் வேண்டும்.

50. இன்னு - தீயவை, நன்னயம் - நன்மை.

தீமை செய்தவருக்கும் நன்மையே செய்தல் வேண்டும்.

## வினுக்கள் :

1. தாய் இன்புறுவதற்குக் காரணம் என்ன?
2. அன்பின் செயல் யாது?
3. செல்வம் யாவருக்குப் பெருகும்?

4. ஒருவனுக்கு அழகு செய்வன எவை?

5. ஞாலத்தின் மாணப் பெரியது யாது?

6. ஒறுத்தாரின் சிறுமை என்ன? பொறுத்தாரின் பெருமை என்ன?

7. அழுக்காற்றின் தீது யாது?

8. யாவரது செல்வம் பயன் மரத்தைப் போன்றது?

9. நட்பாடல் தேற்றுதவர் செயல் யாது?

10. வன்கணவர் எதனை அறியார்?

11. உயிர்க்கு ஊதியம் எது?

12. வெளி வேடத்தாற் பயனில்லை. ஏன்?

13. 'உள்ளத்தால் உள்ளலும் தீது.'—எது?

14. சான்றோர்க்கு எது விளக்காகும்?

15. தீய பிறத்தல் எதனால் வரும்?

16. பிறர்க்குத் துன்பம் செய்தல் கூடாது. ஏன்?

17. வேந்தர்க்கு இருக்க வேண்டும் குணங்கள் யாவை?

18. கற்றவர், கல்லாதவர்களுக்குள்ள வேறுபாடு யாது?

19. அறிவு எதனையொப்பப் பெருகும்?

20. கேள்வியின் பயன் யாது?

21. இறைக்குக் குற்றமாவது யாது?

22. வன்மையுள் எல்லாம் தலை யாது?

23. பீலி பெய் சாகாடும் எதனால் அச்சிறும்? அதனால் அறிய வேண்டுவது என்ன?

24. ஒருவனுக்கு இயற்கையறிவும், புகழும் எவற்றால் அமைந்தனவாகும்?

25. கொக்கு எதற்கு உவமையாகத் தக்கது?

26. கருமம் எதற்குக் கட்டளைக் கல்லாகும்?

27. சுற்றம் தழுவும் பெருமகன் யாவன்?

28. துளி, அளி இவை எவற்றிற்குச் சாதனம்?

29. ஊக்கமுடைமையின் சிறப்பு யாது?

30. உண்மைவெற்றி அரசனுக்கு எதனால் ஏற்படுவதாகும்?

31. உறவினரின் துன்பம் துடைக்கும் தூண் யாவன்?

32. அமைச்சின் ஐந்து குணங்கள் யாவை?

33. சான்றோர் செல்வத்தினும் வறுமையை எப்போது விரும்புவர்?

34. முகம் பளிங்காவது எங்ஙனம் ?

35. நாட்டின் இலக்கணம் என்ன ?

36. மேலோர் நட்பு, கீழோர் நட்பு எவற்றைப் போன்றன ?

37. 'மருவுக, ஒருவுக,' என ஆசிரியர் எவற்றைக் கூறு-கின்றார் ?

38. நற்குடிப் பிறந்தவரின் இயல்பு யாது ?

39. கவரி மானின் இயல்புகள் என்ன ?

40. உழவரின் சிறப்பு யாது ?

41. நாவை ஏன் காக்க வேண்டும் ?

42. உலகத்தார் உள்ளத்தில் உள்ளவன் யாவன் ?

43. வள்ளுவர் காய்கனி இவற்றை எவற்றிற்கு உவமை-யாகக் கூறியுள்ளார் ?

44. மருந்தின்றி வாழும் முறை யாது ?

45. இன்னா செய்தாரை ஒறுக்கும் விதம் என்ன ?

### பயிற்சி :

பிரித்து எழுது :—பெரிதுவக்கும், எனவொரு, பழுத்தற்றால், தன்னெஞ்சம், துடைத்தூன்றும், மாசற்றார்.

எதிர்ச்சொல் எழுது :—இன்சொல், இன்னா, அஞ்சாமை, கற்றோர், பெரியார், உள்ளூர், இன்பம், இன்மை.

# III. கதைப் பகுதி

## சிங்கத்தை முயல் கொன்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக்
    கொன்ற(து)ஒன் றுண்டே தென்னில்,
செறியுமோர் காட்டி லேயோர்
    சிங்கமுண்(டு) ; அந்தக் காட்டில்
உறுவிலங்(கு) அனைத்தும் வேட்டை
    ஆடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
    விலங்கெலாம் ஒருங்கு கூடி 1

"ஆணிளஞ் சிங்க மே!உன்
    அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா ;
    விதத்தினில் தினமொன் ருக
ஊ ணுனக் களிப்போம்," என்ன,
    உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்ருய்
    அருந்தியங் கிருக்கும் நாளில் 2

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
    தன்முறை வருத லோடும்,
'இனியது விடாது நம்மை ;
    எனினும்,ஓர் எடுப்பெ டுத்து
வினையையிப் போது செய்து
    வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும் ;
    நமக்கும்நற் புகழுண்(டு)' என்றே 3

கருதியச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும், முயலை நோக்கி,
மன்னன்,‘ நம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை ; பிந்தி
வருவதென் ? உரை நீ,’ என்று
மனந்தனிற் சினந்து கூற 4

‘ஐய !நின் பசிவே ளைக்கே
அடியனேன் வந்தேன் ; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன் ;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்ய!உன் பக்கல் வந்தேன்
சுவாமி !’என்(று) இறைஞ்சி நிற்க 5

‘சிங்கம்நாம் அல்லால் வேருேர்
சிங்கம்நீ கண்டா யாகில்,
அங்கதைக் காட்டு வா,’என்(று)
அழைத்தலும், அழைத்துப் போயோர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை யெட்டிப் பார்த்த(து) ;
அதனிழல் உருவந் தோன்ற 6

தன்னுறு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித்
துளங்கியே யுயிரி ழந்த(து)

என்னலால், உபாயத் தாலே
யாரையும் வெல்ல லாமென்(று)
இன்னமோர் நண்டு கொக்கை
ஈர்ந்ததோர் கதையும் சொல்லும். 7

பஞ்சதந்திரப்பாடல்] [வீரமார்த்தாண்டதேவர்

**அருஞ்சொற்பொருள் :**

1. செறியும் - மரங்களடர்ந்த, ஊன் - இறைச்சி, ஒன்று - ஒரு கதை, ஒன்று + உண்டு ; ஏது + என்னில்.

2. அடவி - காடு, ஊன் - உணவு, விதம் - வகை, அருந்தி - தின்று, ஆணை - கட்டளை.

3. எடுப்பு - யோசனை, வினை - தொழில் (இங்குச் சூழ்ச்சி), உய்ந்தோம் - பிழைத்தோம், நனி - மிக்க.

4. தப்பி - காலந்தாழ்த்து, வேழம் - யானை, சினந்து - கோபித்து.

5. வெய்ய - கொடிய, வெருவி - பயந்து, பருமுழை - பெரிய குகை, துய்ய - பரிசுத்தமுடையோனே (இங்கு விளிப் பெயர்).

6. பங்கம் - சேறு, பாழ்ந்துரவு - பாழான கிணறு.

7. துன்னு - பொருந்திய, துளங்கி - நடுங்கி, ஈர்ந்தது - அறுத்துக் கொன்றதாகிய.

**பயிற்சி :**

1. குறுமுயல், ஒன்றுண்டேதென்னில், ஆணிளஞ்சிங்கம், ஊனுனக்களிப்போம், ஒவ்வொன்ருய், விலங்கனைத்தும், அங்கொளித்திருந்தேன், பாழ்ந்துரவதனை, ஈர்ந்ததோர்—இவற்றைப் பிரித்தெழுது.

2. பொருள் வேறுபாடு கூறு :—ஊன், ஊண் ; தனி, தணி.

3. இக்கதையைச் சுருக்கி எழுது.

**வினாக்கள் :**

1. சிங்கம் எவ்வாறு வாழ்ந்து வந்தது ?
2. விலங்குகள் சிங்கத்துடன் செய்த ஒப்பந்தம் யாது ?
3. முயல் செய்த உபாயம் என்ன ?
4. சிங்கத்தினிடம் அது கூறியது யாது ?
5. சிங்கம் எவ்வாறு உயிரிழந்தது ?
6. இக்கதையிலிருந்து நீ அறிவது என்ன ?

# IV. பல்சுவைப்பகுதி

## பழக்கமும் பிறவிக்குணமும்

சித்திரமும் கைப்பழக்கம் ; செந்தமிழும் நாப்பழக்கம் ;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் ;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் ; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். 1

—ஔவையார்

## மீனுக்கும் பேனுக்கும் சிலேடை

மன்னீரி லேபிறக்கும் மற்றலையி லேமேயும்
பின்னீச்சிற் குத்தும் பெருமையால்—சொன்னேன்கேள் :
தேனுந்து சோலைத் திருமலைரா யன்வரையில்
மீனும்பே னுஞ்சரியா மே. 2

## தேங்காய்க்கும் நாய்க்கும் சிலேடை

ஓடும் இருக்குமதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடும் குலைதனக்கு நாணாது—சேடியே !
தீங்காய தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயுமிணை செப்பு. 3

—காளமேகப்புலவர்

## குற்றாலக் குறவஞ்சி

### மலை வளம்

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும் ;
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்
டோடும் ;
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம் ;
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்;

செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்;
  தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்;
வழங்குகொடை மகராசர் குறும்பலவில் ஈசர்
  வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே. 4

—திரிகூட இராசப்பக்கவிராயர்

### ஆசிரியர் வரலாறு :

1. ஆசிரியர்—ஔவையார். இவர் தனிப்பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

### அருஞ்சொற்பொருள் :

நித்தம் - நாள்தோறும், கொடை - ஈகை. சித்திரம், தமிழ்த் தேர்ச்சி, கல்வி முன்னேற்றம் இவை பழகப்பழக அமைவன; ஆனால், அன்பும், அருளும், ஈதலும் இயற்கையாய் அமைந்தன என்பது பொருள்.

### ஆசிரியர் வரலாறு :

2. ஆசிரியர்—காளமேகப்புலவர்; கார்மேகம் மழை பொழிவது போன்று கவி பொழியும் இயல்பினர்; ஆதலால், இப்பெயர் பெற்றார். இவர் திருக்குடந்தை வைஷ்ணவர்; பின் சைவரானார்; சிலேடையாகப் பாடலில் வல்லவர். இப்பாடல்கள் சிலேடைப் பொருளுடையன. இரு பொருள் அமையப் பாடப்பட்டன.

### அருஞ்சொற்பொருள் :

1. உந்து - பாய்கின்ற, மன் - மிகுதியான, மன் நீரிலே, மன் ஈரிலே—மிகுதியான நீரினிடத்தில், மிகுதியாக ஈரினிடத்து: மல் தலை, மற்று அலை - வலிய தலையில், மற்று அலையிலே; பின் ஈச்சின், பின் நீச்சின்—பின் பெண்களால் ஈச்சென்ற வாயின் ஒலிக்குறிப்போடு, பின் நீச்சினால். ஈரில் பிறந்து தலையில் திரிந்து ஈச்செனக் குத்தப்படுவது பேன்; நீரில் பிறந்து அலையில் திரிந்து, நீச்சலில் செல்லுவது மீன். இரண்டிற்கும் பொருந்த சொற்கள் அமைந்ததைக் கவனி.

2. தீங்கு ஆயது இல்லா - தீமையில்லாத, இணைசெப்பு - ஒப்பாகக் கூறு, ஓடும் இருக்கும் - (காயேயன்றி) ஓடும் இருக்கும், சில நேரம் ஓடும், பின் ஓரிடத்தில் இருக்கும்; உள்வாய் - உட்புறம், வாயின் உள்ளிடம்; நாடும் - விரும்பும், உற்றுப்பார்க்கும்; குலை - பெருங்குலை, குரைக்கும் தொழில்; நாணுது - வளையாது, பின்னிடாது.

ஓடுடையதாய் உட்பக்கம் வெளுத்து, குலை விடுதலால் வளையாதிருப்பது தேங்காய்; ஓடியிருந்து வாயின் உட்பக்கம் வெண்மை நிறமுடையதாய்ப் புதியவரைக் காணின் குரைப்பதற்குப் பின்னிடாதது நாய்.

ஆசிரியர் வரலாறு:

3. ஆசிரியர்—திரிகூட இராசப்பக் கவிராயர். இது குற்றாலநாதர்மீது பாடப்பட்ட குறத்தி பாட்டு.

அருஞ்சொற்பொருள்:

திரை - அலை, சிற்றில் - சிறிய மணல் வீடு, கிம்புரி - யானைத் தந்தத்திற்கட்டும் பூண், வெம்பு - காய்ந்த, அலர் - விரிந்த, வெடிக்கும் - வீசும், குறும்பலவில் ஈசர் - குறுகிய பலாவின் கீழ் எழுந்தருளிய குற்றாலநாதர்.

பயிற்சி:

1. பிரித்தெழுது:—
மன்னீர், பின்னீச்சில், தேனுந்து, தீங்காயது, சிற்றில், கொம்பொடித்து.

2. பொருள் கூறு:—
கொடை, நாடும், வரை, திரை, கிம்புரி, வெம்பு.

வினாக்கள்:

1. மக்களுக்கு இயல்பில் அமைய வேண்டுவன யாவை?
2. பயிற்சியினால் தேர்ச்சி பெறுவன யாவை?

3. மீனுக்கும் பேனுக்கும் சிலேடையாக அமைந்த பாடலின் பொருள் யாது?

4. தேங்காய்க்கும் நாய்க்கும் பொதுவாயமைந்த சொற்கள் எவை?

5. அருவியின் செயல் யாது?

6. குறவர் எவற்றை உண்பர்?

7. குரங்கு எதனால் பந்தடிக்கும்?

8. குற்றாலமலையின் வளத்தைப்பற்றி ஐந்து வரி எழுது.

TB
031(7)
N58

---

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
89521
சென்னை-600 008.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAY 1958
MADRAS

# SELVAN SENTAMIL VACHAKAM

FORM II—PART I

AUTHOR :
G. MICHAEL PILLAI, M.A.

EDITOR :
MAHAVIDWAN **M. V. VENUGOPAULA** PILLAI

JEGASELVAN & CO.,
PUBLISHERS
NAGERCOIL :: TIRUCHI

*Copyright*]

[*Price* : As. 14 / *nP.* 87